Registered at the G. P. O. as a Newspaper விலை சதம் 10

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 குரோதி பங்குனி 15 துல்கஃ பிறை 24 (28-3-65) ஞாயிற்றுக்கிழமை இதழ் 6




# தேசிய மந்திரி சபை நேற்று பதவியேற்றது

## மந்திரி திருச்செல்வத்துக்கு யாழ். மாநகரசபை பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு. டட்லி சேனநாயக்காவின் "தேசிய மந்திரி சபை"யில் ஸ்தலஸ்தாபன மந்திரியாகப் பதவியேற்றுள்ள திரு. எம். திருச்செல்வத்துக்கு, யாழ்ப்பாணம் மாநகரசபை, பாராட்டுத்தந்தி யொன்றை அனுப்பிவைத்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரசபை சார்பாக மேயர் திரு. என். கி. மகாதேவாஸ் ஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வத்துக்கு அனுப்பிவைத்துள்ள சந்தியில்; ஸ்தலஸ்தாபன மந்திரியாகத் தாங்கள் பொறுப்பேற்றுள்ளதையிட்டு தமிழ் பேசும் மக்கள் குறிப்பாகயாழ்ப்பாண மக்கள் தங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர். எங்களது பாராட்டுதல்கள் உங்களுக்கு உரித்தாகட்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரசாங்க வீடுகளும் கார்களும் வேண்டாம்

### தேசிய மந்திரிசபையின் முதலாவது கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, சனி

தேசிய மந்திரிசபை அங்கத்தவர்கள் இன்று காலை, இராணி மாளிகையில் கவர்னர் ஜெனரல் வில்லியம் கோபல்லாவ முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து தங்களது பதவிகளை ஏற்றுக் கொண்டதும் தேசிய மந்திரி சபையின் முதலாவது கூட்டம் பிரதமர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 16 மந்திரிகளும் கசமுகமளித்திருந்தனர்.

கொழும்பு-7 ஜுன்ன (கறுவாத் தோட்டம்) மக்கார்தி வீதியில் மந்திரிகளுக்காக அரசாங்கத்தினால் நிறுவப்பட்டுள்ள வீடுகளை மந்திரிகள் எவரும் உபயோகிக்கக்கூடாதென்று இன்றைய மந்திரி சபையின் முதற் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மந்திரிகளுக்காக இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் கார்களையும் தேசிய அரசாங்க மந்திரிகள் பாவிக்கக்கூடாதென்றும் மந்திரிசபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## திருச்செல்வம் உட்பட 16 மந்திரிகள் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, சனி

திரு. டட்லி சேனநாயக்காவைப் பிரதமராகக் கொண்ட தேசிய மந்திரிசபை இன்று காலை 7-30 க்கு ராணி மாளிகையில், கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவ முன்னிலையில சத்தியப் பிரமாணம் செய்து கொண்டது. தேசிய அரசாங்கத்தின் மந்திரிசபையில மொத்தம் 16 மந்திரிகள் உள்ளனர். உத்தேச மந்திரிசபை முன்னர் 15 பேரை மட்டுமே கொண்டிருந்தது.

திரு. டட்லி சேனநாயக்கா அமைத்துள்ள மந்திரிசபையில் தற்பொழுது ஒரு தமிழருக்கு மட்டுமே மந்திரிப்பதவி வழங்கப்பட்டிருக்கின்றது.

திரு. டட்லி சேனநாயக்கா அமைத்துள்ள தேசிய அரசாங்க மந்திரி சபை விபரம் வருமாறு:

**டட்லி சேனநாயக்கா**
(பிரதமரும், வெளிவிவகார மந்திரியும்)

**யு. பி. வன்னிநாயக்கா**
(நிதி மந்திரி)

**சி. பி. டி. சில்வா**
(காணிமந்திரியும் சபை முதல்வரும்)

**எம். டி. எச். ஜயவர்த்தன**
(சுகாதார மந்திரி)

**ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லை**
(கல்வி, கலாச்சார மந்திரி)

**ஜே. ஆர். ஜயவர்த்தன**
(ராஜாங்க மந்திரியும் வெளிவிவகார உதவி மந்திரியும்)

**பிலிப் குணவர்த்தன**
(கைத்தொழில் மீன்பிடி மந்திரி)

**எம். எச். மொகமட்**
(தொழில் வேலைவாய்ப்பு, வீடமைப்பு மந்திரி)

**ஈ. எல். பி. ஹூருலே**
(போக்கு வரத்து)

**டபிள்யு. தஹநாயக்கா**
(உள்நாட்டு மந்திரி)

**வி. ஏ. சுகததாசா**
(தேசிய சேவைகள் மந்திரி)

**எம். வி. பி. பீரிஸ்**
(வர்த்தக மந்திரி)

**செனட்டர் விஜயவர்தனே**
(நீதி மந்திரி)

**எம். டி. பண்டா**
(உணவு, விவசாய மந்திரி)

(8-ம் பக்கம் பார்க்க)

## மந்திரி பதவி ஏற்க ஜி. ஜி. மறுப்பு

கொழும்பு, சனி

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்துக்கு மந்திரிப்பதவி வழங்கப்பட்டதென்றும் ஆனால் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொள்ள அவர் கடைசிவரை மறுத்துவிட்டதாகவும் திரு. ஜி. ஜி பொன்னம்பலத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நேற்று நடு ஜாமம் வரை இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றனவென்றும் ஆனால் எந்த மந்திரிப் பதவியையும் ஏற்றுக்கொள்ள திரு ஜி. ஜி முற்றாக மறுத்துவிட்டார் என்றும் நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சதிவழக்கு முடிவடைந்தபின்னர் திரு. ஜி. ஜி மந்திரிப் பதவி எதையும் ஏற்றுக்கொள்வார் என்பதையும் அந்த வட்டாரங்கள் மறுத்துவிட்டன.

## "கோரிக்கைகளை மீட்கவும்"

தொல்லைகந்தை சனி

இலங்கைத் தமிழரசுக் கட்சியை ஐக்கிய தேசியக்கட்சியோடு சேர்ந்து அரசாங்கம் அமைக்கும்படியும், உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் தமிழரின் நல்வாழ்வுக்காக பாடுபடும்படியும் கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தை தோட்டவட்டார சங்கம் இயற்றியுள்ளது.

செவ்வாய்க்கிழமை இரவு காரியக்கமிட்டி கூட்டி தீர்மானித்த இவ்விஷயத்தை உடன் திரு. சா. ஜெ. வே. செல்வநாயகத்துக்கு அனுப்பி உள்ளதாக அதன் இணைச்செயலாளர் திரு. ம. ட. கருப்பையா 'ஈழநாடு' நிருபரிடம் கூறினார்.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது டொலர் மார்க் அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்

உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

## ஹங்கேரிய சிறுகதை

# பச்சைப் பூச்சி

**மூலம்: காள்மன் மிக்ஸாத்**
**தமிழாக்கம்: வ. குகசர்மா**

அந்தக் கிராமத்தில் அவனே மிகச் செல்வந்தன்; மத்திய வயதைத் தாண்டி முதிய பருவத்தை அடைந்தவன். கடுமையான நோயால்வருந்திக் கொண்டிருந்தான். கடவுள் அவனையே ஓர் உதாரணமாக மற்றையோருக்குச் சுட்டிக்காட்டி கொண்டிருந்தார். "நிலையில்லாத மக்களே! உங்களைப்பற்றி நீங்கள் பெருமையடைகிறீர்கள்ஜோன் போலைப் பாருங்கள் உங்கள் யாவரிலும் அவன் செல்வம் படைத்தவன். கிராமத்தில் உள்ள ஏனைய செல்வந்தர் அவன் வீட்டிற்கு அடிக்கடி செல்கிறார்கள். நீதிபதி கூட அவனுக்கு மரியாதை செலுத்துகிறார். அவன் விதிவழிதன் பத்தை அனுபவிக்கவேண்டியவனே அதற்காக ஒரு ... கொண்ட நாயை அவனைக் கடிக்கும்படி தூண்டவேண்டியதில்லை. அல்லது ஒரு ... மரத்தை அவனை நசுக்கும்படி தள்ளிவிடவேண்டியதில்லை ... வெளித்த பறக்கும் பூச்சி அவ் வேலையைச்செய்துவிடக்கூடும்" என்று கடவுள் எடுத்துக்கூறுவதுபோலிருந்தது அவன் நிலை.

உண்மையில் நடந்தது இம் தான். ஒரு பறக்கும் பச்சை நிறப் பூச்சி அவனுடைய ஒரு கையில் கடித்தது. அக்கை விரைவாக வீங்கிக்கொண்டுவந்தது. கையின் நிறம் செம்மை கலந்த கருநிறமாக மாறத்தொடங்கியது. அந்தக் கிராமத்தின் மதகுரு, ஒரு வைத்தியரை அழைக்கவேண்டும் என்று கூறினர். ஜோன் போல் அதற்குச் சம்மதம்கொடுத்திருப்பான், ஆனால் மதகுரு புடாபெஸ்ரிலிருந்து ஒரு நிபுணரை வரவழைக்கவேண்டுமென்றும், அதற்கு மூந்நூறு புளோரின் தேவைவெனவும் கூறியது அவனுக்கு எரிச்சலை மூட்டியது. "ஓர் மெல்லிய பறக்கும் பூச்சி எனக்கு மூந்நூறு புளோரின் நட்டத்தையுண்டாக்கமுடியாது" என்று அவன் வெறுப்புடன் கூறிக் கொண்டான், ஆனால் பணத்தை மதகுரு கொடுப்பதாகக் கூறியதும் அவன் வைத்திய நிபுணரை வரவழைக்கச் சம்மதித்தான். புகையிரத நிலையத்திற்கு டாக்டரை வரவழைக்கச் சென்ற வண்டி வீட்டிற்கு முன்னால் வந்து நின்றதும் முதிய ஜோன் போலின் இளம் மனைவி டாக்டரை வாசலில் வரவேற்றாள்.

"நீங்கள் தான் புடாபெஸ்ற் நகரத்தில் இருந்து வரும்புகழ் பெற்ற டாக்டரா?"— அவள் கேட்டாள்.

"நீங்கள் உள்ளேவந்து என் கணவரைப் பாருங்கள். ஓர் ஈ கடித்ததற்கு யானை அடித்தது போல் ஆரவாரம் செய்கிறார்" என்று மேலும் சொன்னாள்.

அவள் சொன்னது உண்மையல்ல. ஜோன்போல் அவன் வருத்தத்தைப்பற்றிஒரு வார்த்தையும் கூறவில்லை, வருத்தம் கூடியபின்பு, அதுவும் மற்றவர்கள் விசாரித்தபின்பே அவன் கூறினன். டாக்டர் அறைக்குள் நுழைந்தபோது ஜோன்போல் விருப்பு வெறுப்பற்ற நிலையில் உதாசீனமாகப் படுத்திருந்தான்.

"வயோதிபரே வணக்கம், உங்களுக்கு ஒரு பறக்கும் பூச்சி கடித்துவிட்டதாக நான் கேள்விப்பட்டுள்ளேன்"- டாக்டர் கூறினர்.

"அதுதான்"—ஜோன்போல் பற்களுக்கிடையில் மெதுவாகக் கூறினன்.

"என்னவகைப்பூச்சி?"

"ஒரு பச்சை நிறப்பூச்சி"- அவன் சுருக்கமாக விடை கூறினன்.

"டாக்டர், நீங்கள் அவருடன் பேசிக்கொண்டிருங்கள்" திருமதி ஜோன் போல் அவர்கள் பேச்சில் குறுக்கிட்டாள். "நான் வீட்டுவேலைகளைக் கவனிக்க வேண்டும் அடுப்பில் ரொட்டி வெந்துகொண்டிருக்கின்றது."

"சரி அம்மா"— டாக்டர் ஏதோ கவனமாக விடையளித்தார். அவள் பிரமிப்புடன் டாக்டரைப் பார்த்தாள். இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு "ஏன், நீங்கள் வயதில் என் தந்தைக்குச் சமமானம்" - பாதிகோபமாகவும் பாதி இங்கிதமாகவும் கூறினள். "உங்கள் கண்களில் உள்ள சாளரங்களுக் கூடாக நீங்கள் சரியாகப் பார்ப்பதில் இடபோசி தெரிகிறது" இவ்வாறு கூறிவிட்டு அவள் விரைவாகத் திரும்பி நடந்தாள். அவள் நடையில் இளமையின் மிடுக்கு இருந்தது. டாக்டர் அவளைத்தன் கண்களால் பின்பற்றினர். அவள் தன்னிலும் பார்க்க இளமையுள்ளவளாகவும் அவள் கணவனிலும் பார்க்க மிகமிக இளமையுள்ளவளாயும் இருப்பதைக் கண்டார்.

அவளிடம் மன்னிப்புக்கேட்கும் தோரணையில் வந்த வார்த்தைகள் அவர் தொண்டையில் தடைப்பட்டன. அவ்வார்த்தைகளைக்கேட்க அவள் அங்கில்லை.

டாக்டர் நோயாளியின் கரத்தைப் பரிசோதித்தார், அவர் முகம் கவலையைக்காட்டியது. "இது ஒரு நஞ்சுள்ள பூச்சி"- அவர் கூறினர்.

"இது ஒரு சாதாரண வருத்தமல்ல என்பது எனக்கும் தெரியும்" ஜோன் போல் ஓர் உணர்ச்சியுமில்லாமல் கூறினன்.

"ஆனால்இந்தப் பூச்சிஓர் இறந்த உடலிலிருந்து வந்திருக்கிறது"- டாக்டரின் இக்கூற்று ஜோனின் காலைத் திடுக்குறச் செய்தது. "இன்றையுடன் நான் வந்தது நல்லதாய்ப்போயிற்று. நாளைத் திகதியாயின் இங்கேய மரணத்தைத் தந்திருக்கக் கூடும்." "இது ஆச்சரியம்" ஜோன் போல்கூறினன். "இன்றேதொழிற்படவேண்டும். நஞ்சுஇரத்த மூலம் மிகவிரைவாகப் பரவக்கூடும். பணத்தைத்திடப்படுத்திக்கொள்ளுங்கள். உங்கள் கையை நீங்கள் இழக்கவேண்டும்." "எனது கை!" ஆச்சரியமும் பயமும் கலந்திருந்தது ஜோன்போலின் கேள்வியில்.

"ஆம், அது நடக்கத்தான் வேண்டும்" டாக்டர் உறுதியுடன் கூறினர்.

ஜோன்போல்உறுதியானமறுப்புடன் தலையசைத்தான். பின் புகைபிடிக்கத்தொடங்கினன். டாக்டர் அவனைத் தூண்டும் வகையில் "மயக்க மருந்துகொடுத்து கையை எடுத்துவிடலாம் அல்லது நாளை இந்த நேரத்தில் நீர் இறந்துவிடுவீர்" என்று கூறினர்.

"என்னைத்தனியே விட்டுச் செல்லுங்கள் நான் களைப்படைந்திருக்கிறேன்." இவ்வாறு கூறிக்கொண்டேஜோன்போல் சுவர்ப்பக்கம் திரும்பித் தமது கண்களை மூடிக்கொண்டான்.

டாக்டர் அவனது அறையை விட்டு அவன் மனைவியின் அறைக்குச் சென்றார்.

"என்னுடைய கணவரின் நிலையென்ன?" அவளின் குரல் உணர்வற்று ஒலித்தது.

"மிகவும் அவலநிலையில் இருக்கிறார். அவரின் கையை சத்திரவைத்தியத்தின்மூலம் நீக்கிவிட அவரை நீங்கள் சம்மதிக்கச்செய் வேண்டும்" டாக்டர் கூறினர். அவளின் முகம் வெளுப்படைந்தது.

"அது அவசியம் தானா" அவள் கேட்டாள். "அல்லது அவர் இருபத்துநாலு மணித்தியாலத்துள் இறந்துவிடுவார்" டாக்டர் கூறினர். அவள் முகத்தில் சிவப்பேறியது; டாக்டரையும் அழைத்துக்கொண்டு கணவனின் அறைக்குச்சென்றாள்.

"என்னைப் பார்த்தால் ஒரு முடவனுடன் வாழ்வதில் திருப்தியடையும் மங்கையாக வா தோன்றுகிறேன்" அவள் உரத்துக் கூறினள். தனது கணவனைநோக்கினள். "ஜோன் உங்கள் கையைவெட்ட அனுமதியளியாதீர்கள்!" அவள் கத்தியேவிட்டாள்.

ஜோன் போல் அவளை அன்போடு பார்த்தான்,"நான் ஒரு காலமும் சம்மதியேன், நான் துண்டாடப்பட்டுச் சாக விரும்பவில்லை" என்று அவன் கூறினன்.

மதகுருவும் ஏனையோரும் சத்திரசிகிச்சைக்கு ஜோன் போலை சம்மதிக்கச்செய்த முயற்சிகள் எல்லாம் வீணாயின. ஜோன் போலின் இளம் மனைவியோ கணவனின் திடசித்தத்திற்கு மேலும் உதவிசெய்து வந்தாள். டாக்டருக்கு அவளைச் சமாளிப்பதே அரிதாயிருந்தது.

"எனது வண்டியை ஆயத்தம் செய்யுங்கள், நான் திரும்பிப்போகவேண்டும்" டாக்டர் வேலைக்காரனிடம் கூறினர்.

டாக்டர் இப்போது வெளிக்கதவருகில் நின்றார். அடுத்த நடவடிக்கை என்னவென்பதில் அவரின் மனம் குழப்பமடைந்திருந்தது. அப்போது ஓர் உறுதியான தேகக்கட்டுடைய இளம் ஆடவன் திருமதி ஜோனை நோக்கிப்போவதைக் கண்டார். அவனைக் கண்டவுடன் திருமதிஜோன்போலின் கண்களில் ததும்பிய ஆவலையும் அவர் கவனிக்கத்தவறியதில்லை. அவர்கள் நெருடபுடன் விளையாடுகிறார்கள் எனபது அவருக்குப் புலனாகியது. அவருக்கு மேலும் சிலசெய்திகள் தேவையாயிருந்தன. காதல் விடயங்களில் ஈடுபடும் ஒரு மாயக்காரி ஜோனின் வீட்டிற்கு இரண்டு வீடுகள் தள்ளியிருப்பதாக விசாரணையில் அறிந்துகொண்டார்.

அந்த வயோதிப மாதிடம் டாக்டர் சென்று அவள் கையில் இரண்டு வெள்ளிக்காசுகளைக் கொடுத்தார்.

"ஒரு பெண்மேல் காதல் கொண்டிருக்கிறேன். அப்பெண்ணையும் என்மேல் காதல் கொள்ளச் செய்ய வேண்டும்" டாக்டர் கூறினர். "அது முடியாத காரியம். உன்னைப்பார்த்தல் தோட்டங்களில்வைக்கும் வெருளிபோல் தோற்றுகிறாய், உன் போன்றவர்களை பெண்கள் விரும்பமாட்டார்கள்"

"உண்மை அம்மா. ஆனால் என் எல்லச் செல்வங்களையும் அவளுக்கே கொடுப்பேன்."

"யார் அந்தப்பெண்...!"

"திருமதி ஜோன் போல்."

"ஓ, பறிக்கப்பட்ட மலர்கள் போக மிகுதியை நீ பறித்துக் கொள்ளலாம்."

டாக்டருக்குத்தேவையானது இதுதான். "யார் அந்த வேறொருவன்!" டாக்டர் கேட்டார்.

"போல் நேகி ஜோனின் கூலியாள். அவன்மீது திருமதி ஜோன் காதல் உள்ளவளாக இருக்கவேண்டும். என்னிடம் மருந்துக்கு வந்தான், நானும் குடிவகையில் கலந்து கொடுக்கும் மருந்து கொடுத்தேன்" கிழவி கூறினள்.

"ஜோன் போல் சந்தேகிப்பதில்லையா!"

"பலமுறை சந்தேகித்தார். ஆனால் பெண்ணின்சாகசத்தில் அவையெல்லாம் பயனற்றுப் போயின."

டாக்டர்,ஜோனின் வீட்டிற்கு திரும்பிவந்தார். திருமதி ஜோனும் காதலனும் இன்னமும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர், ஜோன் போலின் அறைக்குள் நுழைந்தார்.

"நான் விடைபெற்றுக் கொள்ள வந்திருக்கிறேன்."

"இப்பவே போகிறீர்களா!" ஜோன் போல் கேட்டான்.

"இங்கே எனக்கு ஒரு வேலையுமில்லை" என்று சற்று தயங்கிய டாக்டர் "உங்களுக்கு ஓர் அழகிய மனைவி உண்டு இல்லையா!"

ஜோன்போல் தன்கண்களை விழித்துப்பார்த்தான், "அவள் அழகுள்ளவள் தான்" அவன் மெதுவாகக் கூறினன். "அவளுடைய உதடுகள் இலந்தைக்கனி போன்றவை."

"ஆம்" ஜோனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

"அந்தச் சோம்பேறிப் பயல் அவளிடம் நெருங்கிப் பழகுகிறான்" வயோதிப ஜோனின் தேகம் நடுங்கியது; "டாக்டர் என்ன சொல்லுகிறீர்கள்." டாக்டர் ஏதோ சொல்லக்கூடாததைச் சொல்லிவிட்டது போல் நாக்கைக் கடித்துக் கொண்டார்.

"எந்தச் சோம்பேறிப்பயல் டாக்டர்" ஜோன் கேட்டான்.

"உண்மையாகத்தெரியாதா? உங்கள் கூலியாள்" ஜோனின் உதடுகள் நடுங்கின. "நான் ஒரு மடையன். அவள் பெண்ணல்ல நச்சுப்பாம்பு."

"மனைவியைச் சாபமிடுவதால் பிரயோசனமில்லை. அவளுக்கு இளமையிருக்கிறது. அவள் இப்போது குற்றமற்றவளாக இருக்கலாம். ஆனால் நீங்கள் இறந்துபோனால் அவள் மறுவிவாகம் செய்யத்தானே வேண்டும்"

ஜோன் திடுக்குற்று டாக்டரை உற்றுப் பார்த்தான். டாக்டரோ கவனியாதவர் போல் மேலும் தொடர்ந்தார். "நீங்கள் இறந்த பின்பு வேறோர் வாலிபனை அவள் விவாகம் செய்வதில் உங்களுக்கு என்ன நட்டம்? அவன் உண்மையில் நல்ல தோற்றமுடைய வாலிபன்." ஜோனின் பற்கள் நெறுநெறெனச் சத்தமிட்டன.

"உங்கள் மனைவியின் அழகிய உடல் வீணாகப் போவதா? அவளை முழுவதிலும் இழப்பதிலும் பார்க்க ஒரு கையால் அணைப்பது சிறந்ததல்லவா?" ஜோனின் இருதயம் வெடித்துவிடும் போலிருந்தது. அவனால் தாங்க முடியவில்லை. படுக்கையை விட்டெழுந்தான், வீக்கமுள்ள கையை டாக்டரிடம் நீட்டினன்.

"டாக்டர் கத்தியை எடுங்கள், கையை உடனே வெட்டி விடுங்கள்" என்று கத்தினன்.

## சிறுகதை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ளம்மா வெட்டிப் பேசுவது போல் தங்கம்மாவுக்கு மனப்பிரமை. அவளுக்குத் தலைசுழல்கிறது. விரைவாக வந்து கொண்டிருக்கும் காரோ, பஸ்ஸோ,லொறியோ ...பொன்னம்மா மீது மோத... மனதிற்குள் இப்படி எவ்வளவோ எண்ணங்கள், அற்பநினைவுகள்!

"மாப்பிள்ளை பகுதியில் இருந்தாப்போலே ஒரு செத்தவீடாம், அதனால் மரணத்துடக்கென்று கலியாண வீட்டைப் பின்னுக்குத் தள்ளி வைச்சிருக்கினமாம். நீங்கள் நான் பேசினதைக் குறைவிளங்காமல் வாறகிழமை மட்டில் என்னை காப்பை எடுத்துத் தருங்கோ தங்கம்மா மச்சாள்..." என்று பொன்னம்மா கூறியதைக் கேட்டு தங்கம்மா அதிர்ந்து போனாள்.

(யாவும் கற்பனை)

## நோய்களுக்கு யோக சிகிச்சை

நீரிழிவு நோயை யோகாப்பியாச சிகிச்சை முறையினாலும் குணப்படுத்தலாம்.

யோகாப்பியாச முறையில் சிகிச்சை செய்யும் ஆராய்ச்சி நிலைய நிருவாகியான சுவாமி அனந்தானந்த (ஜெய்ப்பூர்) இதனைத் தெரிவித்துள்ளார். யோகாப்பியாச முறையில் இதுவரை 33 நீரிழிவு நோயாளிகளைக் குணப்படுத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

நீரிழிவு நோய் தவிர ஆஸ்துமா போன்ற நோய்களையும் யோகாப்பியாச சிகிச்சையால் குணப்படுத்த முடியும் என்று திரு. அனந்தானந்த செய்தியாளர்களிடம் கூறினர். ஆஸ்துமா நோய்காரணமாக இந்நிலையத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 6பேர்முற்றிலும குணமடைந்துள்ளனராகும்.

அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
மேலே குறிக்கப்பட்டுள்ள மருந்தை விநியோகஞ் செய்ய
விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

## ஞாயிறு கதை மலர்

# ஒரு சோடி காப்பு

**— தையிட்டி அ. இராசதுரை —**

பொன்னம்மா அதிர்ந்து போனாள்.

"என்ன வம்புத்தனம் செய்தியள் தங்கம்மா மச்சாள்...! உங்களை நம்பியல்லோ நானும் அந்தப்பொருளை உங்களிட்டை வைக்கத்தந்தனான். இன்டைக்கி இராவைக்கி கலியாண வீட்டை போறநேரம் 'எங்கை உன்ரை காப்பைக் கையிலை காணேலை'யெண்டு அவர் என்னைக் கேக்கவேண்டி வந்தா... நான் அவருக்கு என்ன மறுமொழியைபெண்டு சொல்லித் தப்புறது...!"

"..................."

"என்ன தங்கம்மா மச்சாள்... புத்தியாய் ஒண்டும் பேசாமலிருக்கிறியள்... என்னை வாய்திறந்தும் ... ஆமென்று ஒருசொல்லுக்கேட்டியளே...!"

"...என் ஆற்றாமையினால் செய்து போட்டன் பொன்னம்மா... நான்செய்த பிழையை பொறுத்துக்கொள்..." -தங்கம்மாவின் கண்கள் இலேசாகக் கலங்கின. நீதிபதிக்கு முன்னால் மன்னிப்புக்கோரி நிற்கும் மரணதண்டனை பெற்ற கொலைக்குற்றவாளிபோல விட்டையும் தங்கச்சிபிட்டையும் தான் கிடக்குது. இனி இந்தக்காப்ப இரவல் வாங்க நான் கொழும்புக்கல்லோ போகவேணும்..."

" எங்கையடி உன்ரை காப்பு...! ஆருக்கடி காப்பை வித்தனீ...! உன்மையைச் சொல்லாட்டி கி... நீயும் நானும் புருஷன் பெண்சாதியாய் வாழ்றது இன்டைக்குத்தான் கடைசி... இன்டைக்கித்தான் கடைசி..." இப்படியெல்லாம் தனது கணவன் அந்தக் காப்பிற்காக தன்னைப்போட்டு மக்கறம் பாய்ச்சி தன்னோடு சண்டை பிடிப்பதுபோல் அந்தக்காப்பைப்பற்றிய பயங்கர நினைவால் பொன்னம்மா தனக்குள் கற்பனை செய்து பார்க்கிறாள். கடைசியில் எல்லாம் சரியாக இருந்தும் கையில்போடக் காப்பில்லாத ஒரே குறைக்காக கட்டாயமாகப்போக வேண்டிய கலியாண விட்டிற்கும் போகாமல் அழுத கண்களோடும் சிந்திய மூக்கோடும் வீட்டில் அப்படியே தான் நின்றுவிட்டதாக பொன்னம்மா நினைத்துப்பார்க்கின்றாள்.

வைச்சுற்றி பயங்கரமாக வலையம் போட்டுக்கொண்டிருந்த அந்த ஒரு சோடி காப்பைப் பற்றிய பயமும் அசுரவேகத்தில் நாகவிஷமாக ஏறி ஏறிக் கொண்டேயிருந்தது. மணிக்கூடு அப்படியே ஓடாமல் நிற்காதா...! சூரியன் நிற்கிற இடத்தில் அப்படியே ஓடாமல் நிற்காதா...! இப்படியெல்லாம் அந்தக் காப்பைப்பற்றி பொல்லாத மனப்பயத்தில் நேரம் போவதைக்கூட சிறிதும் விரும்பாத தங்கம்மா தனது மன ஆறுதலுக்காக சிறுபிள்ளைத்தனமாக நினைத்துப்பார்க்கின்றாள். கணவனும் சீமெந்துத் தொழிற்சாலைக்கு இரா வேலைக்குப்போய்விட, வீட்டில் தனியாக இருக்கும் பொன்னம்மா, தனது கணவனின் கட்டாயத்தின் பேரில் கள்ளர் காட்டுக்குப் பயந்து தனது தாலிக்கொடியையும் சங்கிலியையும் ஒரு சோடி காப்பையும் பாதுகாப்புக்காக தன்னுடைய வீட்டில் கொண்டு வந்து வைப்பதையும் மறுநாள் விடிந்ததும் தாலிக்கொடியை மாத்திரம் எடுத்துக்கொண்டுபோவதையும், சங்கிலியையும் அந்த ஒரு சோடி காப்பையும் எங்காவது கல்யாண வீடு, செத்த வீடு, கோயில்குளமென்று வெளிக்கிட்டுப் போகும் நேரங்களில்தான் தன்னுடைய வீட்டிலிருந்து எடுப்பதையும், தன்

போன்ற மனப்பிரமை, தங்கம்மாவின் இதயச்சுவர்கள் பயங்கரமாகக் கிடுகிடுக்கின்றன. "உன்னையுமொரு யோக்கியமான மனிசியெண்டுதான் நான் இவ்வளவு நாளாய் எண்ணியிருந்தன். இன்டைக்குப் பொழுதுபடுறதுக்கிடையிலே எப்பிடியும்... அந்த ஒருசோடி காப்பும் என்னைக்கு வரவேணும்..." பொன்னம்மாவின் ஏளனமும் எச்சரிக்கையும் கலந்த இந்த வார்த்தைகள் தங்கம்மாவின் நினைவில் பொன்னம்மாவாகஏசிப்பேசியபடி ஓடிவருகின்றன. தங்கம்மா, தான் உலகத்திடம் கள்ளப்பட்டம் கேட்டுவிட்டது மாதிரியான மனநினைப்பில் சொல்லமுடியாதபடி பயப்படுகின்றாள். "எடிகள்வீ"... "எடி கள்வீ..." என்று தன்னோடு கோபமாகவிருந்த சிலர் தன்னோடு சண்டை பிடிக்கும்போது இப்படியெல்லாம் தனக்கு வடுச்சொல்வது போலவும்... ஊர்முழுவதிலும் தான்செய்த அந்த வேலையைப்பற்றித்தான் எல்லோரும் கூட்டம் கூட்டமாகக் கூடியிருந்து வாயில் கைவைத்து புதினம் புதினமாய் கதைப்பது போலவும் இதனால் வெளியில் வெளிக்கிட்டு அறிந்த மனிதரின் முகத்தில் முழிக்கக்கூட கூச்சப்பட்டு வெளியே கட்டமாடு வதைக்கூட எவ்வளவோ

'மாலை' என்ற மூதாட்டியும் இருள் சூழப்போகும் தனது மரணத்துவாயில் இயற்கையன்னையின் பரந்த மடியில் படுத்துக் கிடக்கின்றாள். சொல்லமுடியாத மன அந்தரத்தில் என்ன செய்யலாம்... என்னசெய்யலாமென்று தனக்குள் ஏங்கி ஏங்கிச் செத்துக் கொண்டிருந்த தங்கம்மாவின் நினைவில் 'கனவு' என்ற நினைவு திருட்டுக் கூட்டமாக ஓடிவருகின்றது. 'பெண்டுகளும் களவெடுக்கலாமோ...!' என்று தங்கம்மா தனக்குள் நினைத்து மலைக்கின்றாள். 'ஒருதற்றை கன்னுக்குட்டியையும் இன்னும் தொட்டறியாத நான் களவெடுத்தால்...!' இப்படி தனக்குள் கேட்டுப்பார்த்தபடி தங்கம்மா களவெடுத்துப் பிடிபட்டவள் போல் பயப்படுகின்றாள். 'ஆபத்துக்குப் பாவமில்லை'யென்று யாரோ தனக்கு முன்னால் நின்று தைரியமூட்டுவதுபோல் தங்கம்மாவிற்கு மனநினைப்பு வேகமாகத் தட்டுகின்றது. அந்த ஒரு சோடி காப்பையும் தான்வைத்ததுமாதிரி அடைவுக்கடையிலிருந்து பொன்னம்மாவின் கல்யாண வீட்டுத் தேவைக்கு எடுத்துக்கொடுக்க முடியாமல் தான் படும் அந்தரத்தை தங்கம்மா மீண்டும் நினைத்துப் பார்க்கின்றாள். அவளுக்கு உயிர் கொடுக்கப்போகும் ஒரு தெய்வமாக 'கனவு' அவள் நினைவில் காட்சி கொடுத்து மறைகின்றது. இராசம்மாவின் வீடு அவள் நினைவில் பிரகாசமாக மின்னி மறைகின்றது. சீட்டுக்காசில் ஒரு இருநூறு ரூபாவை கணவனுக்குக் கூடத் தெரியாமல் தனது தங்கையின் மகளுக்கு ஒரு சோடி காப்பு வாங்குவதற்காக தனது துணிப்பெட்டிக்குள் இரகசியமாக வைத்திருப்பதாக இரண்டு நாளைக்கு முன்னர் என்னவோ கதையோடு கதையாய் இராசம்மா தனக்குச் சொன்ன அந்தக் காசு விஷயத்தைப் பற்றி தங்கம்மா நினைத்துப் பார்க்கின்றாள். இராசம்மாவின் கணவனும் சங்கத்திற்கு வெண்காயம் கொண்டு போய்விட்டான். அவன் வர இரவாகும். இராசம்மா பசுக்களுக்குப் புல்லுப்பிடுங்க இப்பொழுதுதான் தோட்டப்பக்கம் போயிருக்கிறாள். இப்படியெல்லாம் தனக்குள் எண்ணிப் பார்த்த தங்கம்மா இராசம்மாவின் துணிப்பெட்டிக்கு பூட்டில்லாததையும் தன் நினைவில் பசுமரத் தாணிபாக்கிக் கொண்டு தான் நினைத்த விஷயத்தை முடித்து அதன் மூலமாக இன்னொரு விஷயத்தை முடித்து வைக்கப்போகும் நிலையில் மனதையும் சீலையையும் வரிந்து கட்டிக்கொண்டு ஆயத்தமாகின்றாள். பல்லி யொன்று இச்... இச்சென்று அடித்து வைத்துச் சொல்கிறது. தங்கம்மாவின் இதயமும் உடலும் பதறுகின்றன. துணிப்பெட்டி திறந்து காசு களவெடுக்கப் போனவிடத்தில் இராசம்மாவிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டு விட்டது போன்ற மனப்பயம். 'கள்வீ— கள்வீ...' என்று எல்லோரும் தன்னைப் பட்டம் சொல்லிக் கூப்பிடுவதுபோலமனநினைப்பு. பல்லியும் தான் போகிற காரியம் நன்மையென்று தான் சொல்வதாக தங்கம்மா தனது மன ஆறுதலுக்காக நினைத்து முடிப்பதற்கும் பொன்னம்மா தனது வீட்டை நோக்கி அவதி அவதியாக தெருவில் வந்து கொண்டிருப்பதை பார்ப்பதற்கும் சரியாக இருந்தது. தங்கம்மா தன்னையே சமாளித்துக் கொள்ளமுடியாமல் தள்ளாடுகின்றாள். உடுத்திருந்த சீலையே அப்படியே தன்னையுமறியாமல் உரிந்து விழுந்து நிர்வாணமாக நிற்பது போன்று முழு மானமும் பறிபோய் விடும் நிலைக்கு தங்கம்மா வந்துவிட்டாள். 'கொண்டாடி தூமை என்ரை காப்பை... உன்னிட்டே அடைவுவைக்கச் சொல்லியோடி நான் காப்புத் தந்தனான். கொண்டாடி காப்பை...' இப்படிப் பொன்

பொன்னம்மாவிற்கு முன்னால் தங்கம்மா பரிதாபமாகவின்றாள். "நீங்கள் உங்கடை ஆற்றாமையினால்தான் அந்தவேலையைச் செய்தியள் தங்கம்மா மச்சாள்... நான் அதை இப்ப இல்லையெண்ணேலை... அந்தப்பொருளை என்னுடைய தேவைக்கு நீங்கள் இன்டைக்கு பொழுது படுறதுக்கிடையிலே எப்பிடியும் எடுத்துத்தரப்பாருங்கோவன்..." கூற்றுவனிடம் உயிர்ப் பிச்சை கேட்டு நின்ற சாவித்திரியின் நிலையில் பொன்னம்மா காட்சியளித்தாள்.

"நாளைக்கு எடுத்துத்தாறன்..."

பொன்னம்மாவிற்கு புண்ணில் புளிப்பத்தினது மாதிரியாகவிருந்தது. சூழுறிவெடித்த கோபத்தில் பொன்னம்மா தங்கம்மாவை அப்படியே சபித்து எரித்து விடுபவள் போல முறுய்த்துப் பார்த்தாள். தங்கம்மாவுக்குப் பொல்லாத பயமாக இருந்தது.

"ஒருத்தர் பொருளை எடுத்து இப்பிடியெல்லாம்கோகமாதிப் போட்டேனேயெண்ட மன இடிப்பு துடிப்பு உங்களிடம் ஒரெப்பனும் இல்லை. சரி பறுவாயில்லை... இனிநாங்களும் ஒன்றுக்குள் ஒன்று. நாளைக்கு இப்பிடித்தான எனக்கும் ஒரு அந்தரம்வருமெண்டு நினைச்சுக்கொண்டு ஊருக்குள் போய் இரவல்வாங்கிப் போட்டுக்கொண்டு போறதுக்கும் வழியில்லை. என்னுடைய காப்பு ரேடியோக்காப்பு. அப்பிடிக் காப்பு இந்தவூருக்குள் என்

உலகத்திலில்லாத பொல்லாத கவலைகளெல்லாம் அவளுக்கு கடல்கடலாய் பெருகிப் பொங்கி வருகின்றன. தங்கம்மாவை அப்படியே கழுத்தில் பிடித்துத் திருகி நெரித்துக் கொன்றுவிட வேண்டும்போல் அவளுக்கு தாங்கமுடியாத மனஆவேசம் ஊழித்தீயாக அவள் இதயத்திலிருந்து மூண்டெழுகின்றது. "உன்னையுமொரு யோக்கியமான மனிசியெண்டுதான் நான் இவ்வளவு நாளாக எண்ணியிருந்தன். இன்டைக்கி பொழுது படுறதுக்கிடையில எப்பிடியும்... அந்த ஒருசோடி காப்பும் என்ரை கைக்குவரவேணும்..." இப்படி வெடுக்கென்று தங்கம்மாவோடு கோபித்துப்பேசிய பொன்னம்மா பாண்டியன் அவையிலிருந்து மதுராபுரியை எரிக்கப்புறப்பட்ட கண்ணகியாக அடக்கமுடியாத மன ஆவேசத்தோடு தெருவை நோக்கி நடக்கின்றாள். பொன்னம்மாவின் அந்த ஒரு சோடி காப்புப்பிரச்சினையையும் பொழுது சாய்வதற்கிடையில் எப்படிச் சரியாக்கி வைக்கலாமென்று பயங்கரமாகச் சுழன்று கொண்டிருக்கும் மூளைக்குள்ளும் நெஞ்சிற்குள்ளும் மாறி மாறி நின்று ஆழமாகவும் நீளமாகவும் நிதானமாகவும் அவசரமாகவும் யோசித்துப் பார்த்தபடி தங்கம்மா பொலபொலவென்று கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தாள்.

உச்சிப் பொழுதில் உலகம் கொதிநீரிற்குள் போட்டப்பட்ட கோழிமுட்டையாக அவிந்து கொண்டிருக்கது. நேரமும் ஏற ஏற தங்கமாவின் நினை

கம்மா சேர்ந்து சுருவியபடி நினைத்துப் பார்க்கின்றாள். "பெரியாச்சி பயணம்போறதுக்கு கையிலை காசொருசதமுமில்லை, கைமாத்தாய் காசொரு ஐம்பது ரூவாய் இப்பமாறித் தாருங்கோ... நான் அங்கு போனகையோடு உங்கடை காசை அனுப்பி வைக்கிறன் பெரியாச்சி..." இப்படி தனது சகோதரியின் மகன் இராமலிங்கம் தன்னிடம் வந்து கேட்டதையும் அவன்பட்ட அந்த

ரத்தைக் கண்கொண்டுபார்க்க முடியாத பரிதாபத்தில் தனது கையில் அந்தநேரம் ஒரு வெள்ளைச்சல்லிக்கும் வழியில்லாமலிருந்தும் எப்படியும் ஆருடையகழுத்தையாவது முறித்து தனது பெருமகனின் அந்தரத்தைத் தீர்த்துவைக்கவேண்டுமென்ற எண்ணத்தில் பொன்னம்மாதானே... அவள் தன்னை ஒன்றும் 'சொல்லமாட்டா'ளென்று நினைத்துக்கொண்டு அவள் பத்திரமாக தன்னிடம் வைத்துக் கரும்படி கொடுத்த அந்த ஒருசோடி காப்பையும் தனது கணவனுக்குக்கூடத் தெரியாமல் அடைவுக்கடையில் ஐம்பது ருபாவிற்கு அடைவு வைப்பித்து அவனுக்கு காசு கொடுத்ததையும் தங்கம்மா நினைத்துப்பார்க்கின்றாள்.

"என்ன வம்புத்தனம் செய்தியள் தங்கம்மா மச்சாள்... உங்களை நம்பியல்லோ நானும் அந்தப்பொருளை உங்களிட்டை வைக்கத் தந்தனான். இன்டைக்கு இராவைக்கி கலியாண வீட்டுக்குப் போறநேரம் எங்கை உன்ரை காப்பைக் கையிலை காணேலையெண்டு அவர் என்னைக் கேக்கவேண்டி வந்தா... நான் அவருக்கு என்ன மறுமொழியையெண்டு சொல்லித் தப்பிறது...!" பொன்னம்மா மன அதிர்ச்சியோடு அழுதகுறையாக இப்படிக் கேட்டதை தங்கம்மா தன் நினைவிலிழுத்துப்பார்க்கின்றாள் ஒருபெரிய குற்றத்தைச் செய்துவிட்டவள் போல் தனக்குள் அம்பாந்தோட்டைக் கள்வன்மாதிரி முழித்துநிற்கிறாள். "என்ன தங்கம்மா மச்சாள்...புத்தியாய் ஒண்டும் பேசாமலிருக்கிறியள். என்னை வாய்திறந்தும்... ஆமென்று ஒருசொல்லுக் கேட்டியளே...?" இப்படி தங்கம்மாவின் நினைவில் பொன்னம்மா வந்து நின்று கேள்வி கேட்பது

குறைத்துக்கொள்வது போலவும் தங்கம்மா கற்பனைசெய்து பார்க்கின்றாள். தனது பெருமகன் இராமலிங்கத்தின்மேல தங்கம்மாவிற்கு ஆத்திரம் ஆத்திரமாய்வருகிறது. பயணம் போனகையோடு காசை அனுப்பிவைக்கிறனென்று கட்டாயப்படுத்தி சொல்லிவிட்டுப் போனவன் ஒரு மாதக்கணக்காகியும் இன்னும் அதைப் பற்றி தருகிறேன்... தரவில்லையென்று நாலு சொல்லில் ஒரு கடிதமாவது கீறிப்போடாமல் அப்படியே உபாயமாக இருப்பதை தங்கம்மா நினைத்துப் பார்க்கின்றாள். தாங்கமுடியாத மனவர்மத்தில் இராமலிங்கத்தைத் தங்கம்மா வாயில் வந்தபடி... அவனே... இவனே என்றெல்லாம் வாயில் போட்டுச் சப்பித்துப்பி மனம் நோகிறது. அந்தநொடிக்குள் தங்கம்மா தான இராமலிங்கத்தை மனம் நொந்துகொண்டதற்காக அவனுக்கு ஒன்று நடந்துவிட்டது போன்ற மனநினைப்பில் மனம்மாறி பால் உபாதியில் கரைந்த நினைத்துக் கதறும் காப்பின் நிலைக்கு வந்துவிடுகின்றாள். பகற்பொழுதும் 'மாலை' என்ற முதுமைப் பருவத்தைப் பார்த்து தனது கடைசிப்பயணத்தை நெருக்கிக் கொண்டிருந்தது. பாக்கியம்... அன்னபூரணம்... மனோன்மணி ...ரேவதி — ஆச்சிப்பிள்ளை ... காசு கைமாற்றாக வாங்கி அந்த அடைவை எடுப்பதற்காக இப்படி ஊருக்குள் தனக்கிசைந்த பேர் வழிகளை தங்கம்மா மனதில் நினைத்துப் பார்த்ததும் செயலளவில் அது அவளுக்கு எவ்வளவோ... எவ்வளவோ ... காதவழிதூரமாகத் தெரிகிறது "அந்தக் கல்யாணவீடு குழம்பிப்போக வேணும்" — கலியாணம் வீடு குழம்பினால் பொன்னம்மாவும் நிச்சயமாக கலியாண வீட்டிற்குப்போக வேண்டிய அவசியம் வராது. அந்த ஒரு சோடி காப்பையும் அடைவுக்கடையிலிருந்து எடுத்துக் கொடுப்பதற்கும் தானும் இவ்வளவு அந்தரப்படவும் தேவையில்லை என்ற உன் நினைவோடு தங்கம்மா இப்படியெல்லாம் தனக்கு அப்பொழுதிருந்த மனநிலையில் தனது மனத்தை ஆற்றுப்படுத்திக் கொள்ள நினைத்துப்பார்க்கின்றாள்.

(4ம் பக்கம் பார்க்க)

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரீ சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Woolen)
லேடன் இண்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

ஈழநாடு
EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389
யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு பங்குனி மீ 15உ. (28-3-65)

# வானத்தை வில்லாக...!

"வானத்தை வில்லாக வளைப்போம், மண்ணைக் கயிறாகத் திரிப்போம்" என்றெல்லாம் அரசியல் வாதிகள் கூறுவார்கள் எனப் பொதுவாகச் சொல்லப்படுவதுண்டு. சென்ற திங்கட்கிழமை இங்கு தேர்தல் நடந்துமுடிந்தது. இத்தேர்தலில் சுமார் 5 0 பேர் போட்டியிட்டனர். மூன்றுமாத காலம் தங்களுக்கு ஆதரவுகோரிப் பிரசாரம் செய்தனர். சண்டமாருதப் பிரசாரம், சூறாவளிப் பிரசாரம் என்றெல்லாம் சொல்லக்கூடிய முறையில் பிரசாரங்கள் நடைபெற்றன. வானத்தைவில்லாக வளைப்போம் என்று இவர்களில் யாரும் சொல்லவில்லை. ஆனால் அதையும் மிஞ்சிய சாதனைகளைச் செய்வோம் என்று அவர்கள் சொன்னார்கள். மேடைகளில் சவால்களும் எதிர்ச்சவால்களும் விடப்பட்டன. இப்பொழுதெல்லாம் ஓய்ந்துவிட்டன!

நமது அரசியல் வாதிகள் என்ன சொன்னாலும் சரி, வானத்தை வில்லாக வளைத்துவிட்டார்கள் சோவியத் விஞ்ஞானிகள். தமிழ்நாட்டுப்பாரதியார் சந்திரமண்டலத்தைப் பற்றிக் கூறியதை அமெரிக்க விஞ்ஞானிகள் சாதனையில் சாதித்துள்ளனர். ஆமாம் அவர்கள் சந்திரனைச் சாடிவிட்டனர்! விஞ்ஞானம் மெத்த வளர்ந்துவிட்டது மேற்கில் என்பதற்கு சந்திர மண்டலப் பிரயாண முயற்சி சான்று. சந்திரமண்டலத்தின் மேற்பரப்பில் அமெரிக்க 'ராக்கெட்' இறங்கியுள்ளது. அங்கிருந்து புகைப்படங்களையும் பூமிக்கு அனுப்பியுள்ளது. அமெரிக்கர் தங்கள் இல்லங்களிலிருந்தபடியே 'டெலிவிஷனில்' சந்திரமண்டலக் காட்சிகளைப் பார்த்து மகிழ்ந்தனர். அமெரிக்க விஞ்ஞானிகளின் சாதனையைக் கண்டு வியப்படைந்தனர். இதற்கு சில தினங்களுக்கு முன்னர் சோவியத் விஞ்ஞானிகள் மற்றொரு பெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளனர். விண்வெளியில் பிரயாணம் செய்த இரு சோவியத் விண்வெளி வீரர்களில் ஒருவர் விண்வெளியில் சில யார் தூரம் நடந்துசென்றிருக்கிறார். இதுவும் சந்திரமண்டலப் பிரயாண முயற்சியில் ஈட்டிய மற்றொரு வெற்றி. இதே சமயம் அமெரிக்க விண்வெளிக்கு இரட்டையர்களுடன் அனுப்பிய விண்வெளிக் கப்பல் வேறு பல பரிசோதனைகளையும் நடத்திவந்துள்ளது. இதற்கு முன்பு தன்னிச்சையாகப் பிரயாணம் செய்து திரும்பிய இந்த விண்வெளிக் கப்பல்கள் இப்பொழுது ஆகாயவிமானம் போல் விரும்பிய திசைகளுக்கு திருப்பக் கூடிய சாதனையை இந்த முயற்சி வெற்றியீட்டிக்கொடுத்துள்ளது. 1970-ம் வருடத்துக்குமுன் சந்திரமண்டலத்தை மனிதன் கைப்பற்றிவிடுவான். இது உறுதியாகிவிட்டது. நாடு பிடிப்பதற்கும், அதிகாரவெறிக்கும் அணுசக்தியையும் விஞ்ஞான ஆராய்ச்சியையும் பயன்படுத்தும் எண்ணம் வல்லரசுகளிடமிருந்து முற்றாக நீங்கிவிட்டால் சந்திரமண்டலத்தை மட்டுமல்ல சகல மண்டலங்களையுமே மனிதன் தனதாக்கிக் கொள்ளமுடியும். சோவியத் யூனியனும் அமெரிக்காவும் தனித்தனியாகச் செய்யும் இந்த முயற்சியை ஒன்று சேர்ந்து செய்தால் சந்திரமண்டலப் பிரயாணம் இன்னும் சுலபமாகிவிடும். ஒற்றுமையாக சந்திரமண்டலத்தை அடைந்தால் அங்கும் ஒற்றுமை நிலவ வழிபிறக்கும். இல்லையேல் அங்கும் ஒரு 'பேர்லின் சுவர்' எழுப்ப நேரிடலாம்! பூமியிலேயுள்ள இந்த வேற்றுமைகளும் பிரிவினைகளும் சந்திர மண்டலத்துக்கும் போகவேண்டாம்! அங்கும் அரசியல்வாதிகள் சென்று சவால்களும் எதிர்ச்சவால்களும் விடாமலிருக்கட்டும். நமது அரசியல் வாதிகளுக்கு இப்போதைக்கு அந்தச் சந்தர்ப்பம் ஏற்பட இடமில்லை. அமெரிக்கரும் ரஷ்யரும் நிகழ்த்தும் சாதனை நமது அரசியல்வாதிகளின் கண்களை இனியாவது திறக்கச்செய்யவேண்டும். சந்திரமண்டலத்துக்குப் போகவேண்டாம். இந்த மண்டலத்தையாவது நிம்மதியாக வைக்க உதவிபுரியட்டும்.

## வடமொழி நாடகம்

# பத்திரஹரி

— நவாலியூர் சோ. நடராஜன் —

இந்நாடகம் 15-ம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. இது பத்திரஹரியின் துறவைப் பொருளாகக் கொண்ட நாடகம். வேட்டைக்குச் சென்ற பத்திரஹரி தன் மனைவியின் அன்பைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காகத்தான் இறந்துவிட்டதாக ஒரு பொய்யான செய்தியை அனுப்புகிறான். இதைக்கேள்வியுற்ற மனைவி உயிர் துறக்கிறாள். இந்தக் கொடுஞ்செய்தி பத்திரஹரியைத் துன்பக்கடலிலே ஆழ்த்திவிடுகிறது. கோரட்சகநாதர் என்ற சந்நியாசி பத்திரஹரிக்குஉபதேசஞ் செய்ய அவர் துறவுபூணுகிறார்.

அக்பர் காலத்தில் வாழ்ந்த சேஷகிருஷ்ணர் (16-ம் நூற்றாண்டு) கம்சவதம் என்ற நாடகத்தை 6 அங்கத்தில் எழுதினார். 16-ம், 17-ம், 18-ம் நூற்றாண்டுகளிலே தமிழ்நாட்டில் பல புலவர்கள் வடமொழிக் காவியங்களையும் நூல்களையும் இயற்றினர். இவ்வாறு பல நாடகங்களும் தோன்றின.

சிறீநிவாச தீட்சிதர் 16-ம் நூற்றாண்டிலே வாழ்ந்த புகழ் பெற்ற பண்டிதர். இவர் பல நூல்களையும் நாடகங்களையும் இயற்றினார். அதில் ஒன்று பைமீபரிணயம். அது தமரன்... திவின் கல்யாணத்தைப் பற்றிக் கூறுவது. தஞ்சை ரகுநாத நாயக்கர் (1614-1632) வாழ்க்கை வரலாற்றை இரகுநாத விலாசம் என்ற பெயரால் யஞ்ஞநாராயண தீட்சிதர் எழுதினார். வடஆர்க்காட்டைச் சேர்ந்த குருராமகவி என்பவர் "இரத்தினேசுவரப் பிரசதன" "சுபத்திரா தனஞ்செய" என்ற நாடகங்களை ஆக்கினார். பத்து அங்கங்களைக் கொண்ட "மல்லிகா மருதம்" என்ற பிரகரணத்தை உத்தண்டி என்றழைக்கப்படும் உத்தண்டநாதர் என்ற புலவர் 17-ம் நூற்றாண்டிலே மதுரையில் எழுதினார். இவரைக் கள்ளிக் கோட்டைச் சேரமான் ஒருவர் ஆதரித்துவந்தார்.

அதே நூற்றாண்டில் வாழ்ந்து வேறு துறைகளிலே பல நூல்களை இயற்றிய நீலகண்ட தீட்சிதர் "நளசரித்திர நாடகம்" என்ற நாடகத்தை எழுதினார். இவர் மதுரை நாயக்க மன்னரின் கீழ் மந்திரியாக இருந்தார். 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தஞ்சையில் வாழ்ந்த ராமபத்திர தீட்சிதர் "ஜானகிபரிணயம்" என்றநாடகத்தை எழுதினார். இந்நாடகத்திலே ராவணன், தாடகை முதலாயினோர் ராமலக்குமணரைப்போல வேடந்தாங்கி குழப்பத்தையுண்டாக்குகின்றனர். ராமன் சீதையைத்தேடும் காட்சி நாடகத்தில் ஒரு சிறு நாடகமாக ("அங்க நாடகம்") ராவணன் சபையில் நடிக்கப்படுகிறது. நாடக இறுதியில் தாபசிவடிவிலே சூர்ப்பனகை தோன்றி, ராமர் இறந்துபோனதாகப் பரதனுக்கு அறிவிக்கிறாள். அவன் உடனே தற்கொலைபுரிய ஆயத்தமாகுஞ் சமயம் ராமர் வந்துவிடுகிறார். ருசிகரமான சந்தர்ப்பங்களையுண்டாக்குவதிலும், பக்திமிக்க பாடல்களை எழுதுவதிலும் ராமபத்திரர் திறமையுடையவர். பிற்கால நாடகாசிரியரில் இவர் புகழ்வாய்ந்தவர்.

தஞ்சையைச் சேர்ந்தவரும் 17-ம் நூற்றாண்டினருமான மகாதேவன் என்பவர் அற்புத தர்ப்பணம் என்ற நாடகத்தை எழுதினார். இது அங்கதன் தூதுதுவங்கி ராமபட்டாபிஷேகம் வரையுள்ள ராமாயணக் கதையைக் கூறுகிறது. நல்ல தீட்சிதர் என்பவர் சுபத்திரா பரிணயம் என்ற நாடகத்தையும் ராமவர்மா என்ற திருவிதாங்கூர் இளவரசர் ருக்மணி பரிணயத்தையும் எழுதினார். கேரள மன்னனின் போர் நிகழ்ச்சிகளைப் பற்றி தேவராஜன் என்பவர் பாலமார்த்தாண்ட விஜயம் என்ற நாடகத்தை இயற்றினார்.

வடமொழி நாடகம் சீர்குலைந்து திசையடைந்தகாலத்திலே உருவக நாடகங்கள் சில எழுதப்பட்டன. இவை உடல்நிலைச் சிலேடையாகத் தத்துவார்த்தப்பொருளை விளக்கின. இத்தகைய நாடகங்களுள் தலைசிறந்தது கிருஷ்ணமிஸ்ரர் எழுதிய "பிரபோதசந்திரோதயம்". இந்நாடகாசிரியர் கி. பி. பதினோராம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

உருவகநாடகங்கள் வடமொழியில் மிகக்குறைவு. முதல் முதல் உருவகநாடகமுறையைக் கையாண்டவர் அஸ்வகோஷர் எனலாம். ஆனால் அவருடைய நாடகங்கள் உருப்படியாகக்கிடைக்கவில்லை. சிற்சில பகுதிகளே கிடைத்துள்ளன. சில பண்புகளை நாடக பாத்திரமாக அமைத்து இவர் உருவக நாடகத்தை எழுதியுள்ளார். மேனாட்டு நாடக வளர்ச்சியிலே மத்தியகாலத்தில் இத்தகைய உருவக நாடகங்கள் பெருவழக்காயிருந்தன. இவற்றுள் சிறந்ததொரு நாடகம் "எவரிமான்" என்ற உருவக நாடகம்.

ஆனால் வடமொழி இலக்கிய வளர்ச்சியில் உருவகநாடகம் முக்கிய பங்கெடுத்ததெனச் சொல்வதற்கில்லை. சிறு வழக்காயிருந்ததெனச் சொல்லக்கூட ஏதுக்கள் கிடையா. எனினும் இவ்வகை நாடகங்கள் வடமொழியில் 11-ம் நூற்றாண்டின் பின்னரே வளர்ச்சியுற்றன.

கிருஷ்ணமிஸ்ரர் பழைய மரபுக்கு மறுமலர்ச்சியளித்தாரா? தானே புதியதொரு நாடக உத்தியை உண்டாக்கினாரா? என்பது தெளிவாயில்லை.

இவர் உடனிலைச் சிலேடையாகச் சில சமாச்சாரத்திரக் கோட்பாடுகளை நாடக பாத்திரமாக்கிச் சாதாரண நாடக உத்தியை அனுசரித்து நாடகம் புனைந்துள்ளார். உடனிலைச் சிலேடையென்பது "ஒரு பாட்டு வேறேவரும் பொருளையன்றி வேறுமொரு பொருள் கொண்டு விரிக்கும் தன்மையில் நிற்கும் அணி" என்பர். குணங்களுக்கு உருவங்கொடுத்து அவற்றை நாடக பாத்திரமாக்கும்பொழுது அக்குணங்கள் மனித அம்சகுணமுடையனவாய் நடமாடுகின்றன. அதனால் மறைபொருளை அறியாதவர்கூட வெளிப்படையான பொருளை உணர்ந்து சாதாரண நாடகத்தை இரசிக்கும் நிலையை அடைவர். எனவே இத்தகைய உருவக நாடகங்களும் உருவ

(7-ம் பக்கம் பார்க்க)

## வளரும் விஞ்ஞானம்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வாயுமண்டலம் எதுவும் இல்லாதிருப்பதே. இதன் பலன் அங்கு தட்பவெப்பங்களில் விரிவானவேற்றுமைகள் இருப்பது. பகலில் மேல்பரப்பில் வெப்பம் 220 டிகிரி பாரன்ஹீட் வரை உயர்கிறது இரவிலோ 250 டிகிரி வரை குளிர்ந்து விடுகிறது.

எனவே மனிதன் அறிந்த "கடும் வெப்பமும் கடும் குளிரும் உள்ள இடம்" சந்திரன் தான் என்று கூறினார் லோவிக். தட்பமும் வெட்பமும் அதிகமாக இருப்பதால், சந்திரனில் ஆராய்ச்சி நடத்துவோர் தட்ப வெப்ப வசதியுள்ள திண்மையான உடுப்புகள் அணிந்திருக்கவேண்டும்.

இதுபோன்ற விண்வெளி உடுப்பு அணிந்துள்ள ஒரு விஞ்ஞானி நுட்பமான கருவிகளைக் கையாள முடியாது. எனவே அவர் இயக்கக்கூடிய தனிவகைக்கருவிகளுக்கு வடிவம் வகுத்து அவற்றைத் தயாரிப்பது அவசியமாகும்.

சந்திரனில் உயிர் வாழ்க்கை ஏதாவது இருக்க விண்வெளி விமானி காண்பாரா?

"சந்திரனில் ஏதாவது ஒரு வகை உயிர்வாழ்க்கை இருக்கக்கூடும். ஆனால் நாமறிந்த ஒருவகையானதாய் அது இல்லாதிருக்கலாம்" என்கிறார், அமெரிக்க வல்லுநர்.

### பெருஞ்செலவு

சந்திரனுக்குப் போய்வரும் திட்டம் பெரும் செலவு பிடிக்கக்கூடியது. ஆயினும் மனிதனுக்குப் பயன்படக்கூடிய பல துணைப்பொருட்களைக் கண்டுபிடிக்க விண்வெளி ஆராய்ச்சி வழிகாட்டுகிறது டெலிவிஷன் படமெடுக்கும் கருவியில் புதிய மாறுதல்கள் செய்யப்படுகின்றன. கடும்வெப்பத்தைத் தாங்கக்கூடிய கனமில்லாத பொருட்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. துல்லியமான அறுவைக் கருவிகள் உருவாக்கப்படுகின்றன. இவையனைத்தும் தொழில்துறை உற்பத்திகளுக்குத் துணைசெய்யக் கூடியவை என்றார் லோவிக்.

# சீசரைப் போல் சாவேன்

—பெரி. சண்முகநாதன்—

களங்கண்ட பெருவீரன் சீசர் தன்னை
கருத்தற்ற சிலபேர்கள் கூடிப் பேசி
உளம்பதைக்கக் கொன்றிடத்தான் சதிவகுத்தே
உத்தமனை அவைக்களத்தில் சூழ்ந்துகொண்டார்
பலபேர்கள் கட்டாரி கொண்டு தாக்கப்
பலமாகக் கையாலே தடுத்தான் சீசர்
நலமிருந்த தன் நண்பன் புருட்டஸ் தானும்
நடுவினிலே தனைக்கொல்ல முயலுதல் கண்டான்

அண்ணலென்றும் ஆவியென்றும் சொன்ன நண்பன்
ஆருயிரைக் கவர வந்த நிலையை எண்ணி
"என்னருமை புருட்டஸே நீயுந்தானா!"
என்றவொரு முத்துதிர்த்தான்; மேலும் நோக்கி
"உன் முடிவும் அப்படியா? இனிமேல் சீசர்
உயிர் முடிந்து போகட்டும் கடத்து" என்று
குன்றெனவே நிமிர்ந்து நின்றான் தடுத்தானில்லை
குத்திவிட்டான் புருட்டஸனாம் சீசர் மார்பில்

புன்னகையைச் சிந்திவிட்டுச் சீசர் செத்தான்
புகழ்மலையாய் நிற்கின்றான் மக்கள் நெஞ்சில்
புன்தொழிலைப் புரிந்துவந்த புருட்டஸ் எங்கே
புத்திகெட்ட அவன் நண்பர் கூட்டம் எங்கே?
புன்முளைத்த இடங்கூடத் தெரியாவாறு
புழுதியிலே புழுதியெனப் படிந்தே விட்டார்
"வன் செயலைப் புரிந்தவர்கள் வாழ்ந்ததில்லை"
வரலாற்றின் உண்மையிது; நினைவில் வைப்பீர்!

அன்பென்றும் தெய்வமென்றும் சொன்னவர்கள்
அற்பனென்று தூற்றியெனைத் தாக்கவந்தால்
இன் முகத்தைக் காட்டி நிலன் வருக என்பேன்
இதயத்தைப் பிளந்தாலும் கவலையில்லை
நண்பர்கள் பகையாக மாறும்போது
நகை காட்டிச் சீசரைப்போல் நிமிர்ந்து நிற்பேன்
கண்ணீரைக் காணிக்கை வைப்ப தெல்லாம்
கறைபடியும் அவர் வாழ்வில் என்பதாலே.

# தேர்தல் மஹோற்சவம்

—"சுத்திரிக் குருவி"—

1964-ம் ஆண்டு கடைசிப்பகுதியில் இலங்கை சனப்பிரதிநிதிகள் சபை எவ்விக பரபரப்பும் புதினமுமான சூழ்நிலையில் கலைக்கப்பட்டதோ அதே பரபரப்பும் புதினமும் நிறைந்த சூழ்நிலையில் புதிய பார்லிமெண்ட் சென்ற வாரம் உருப்பெற்றது. முன்னும் பின்னும் இவ்வாறு புதினமும் பரபரப்புமாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் இம்முறை எவ்வளவோ புதுமையான அனுபவங்களையும் விநோதங்களையும் நமது வாக்காளர்கள் காணமுடிந்தது.

தேர்தலில் ஆள்மாறாட்டம் நடைபெருமலிருக்க வாக்காளரின் இடது கை சுட்டுவிரலில் மை அடையாளம் இடப்பட்டதே இதற்கு முன் கண்டிராத புதுமையான அனுபவமாயிருந்தது பலருக்கு. ஆஸ்பத்திரி நோயாளிகளிடம் இரத்தம் எடுத்துச் சோதிக்க அவர்கள் படுக்கையை அணுகும் ஊழியர்கள் இவ்விதமாகத்தான் விரலை நீட்டும்படி கேட்பார்கள். ஆனால் அது இடது சுட்டுவிரலாகத்தானிருக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. வாக்களிக்கச்சென்றவர்கள் சிலர் வாக்குச் சாவடிக்கு நுழைந்த மாத்திரத்திலேயே இடதுகை சுட்டுவிரலை நீட்டிப் பிடித்துக்கொண்டு மை இடுவோரை அணுகியபோது அவர்கள் எங்கே தமது கண்ணுக்குள் விரலினால் குத்திவிட போகிறார்களோ என அஞ்சிய மை உத்தியோகத்தர், பல சமயங்களில் இரண்டடி பின்வாங்கி நின்றதாகச் சொல்லப்படுகிறது.

தேர்தல் வாக்களிப்பு நிலையத்தில் கடமையாற்றியவர்கள் நீட்டிய விரலிற் பாய்ந்த மற்றொரு சம்பவமும் உண்டு.

பட்டணத்து நாகரிக யுவதி ஒருத்தி தன் கைவிரல்களுக்கு வழக்கமாகப் பூசும் மைப்பூச்சுடன் வாக்களிக்கச் சென்று கைவிரலை நீட்டியபோது தேர்தல் உத்தியோகத்தர்கள் அவளைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்து விசாரணை செய்ததாயும், பின்பு அது அவருடைய நாகரிக அலங்கார மைப்பூச்சு எனத்தெரிந்து திருப்தியடைந்ததின் பேரில் அவள் விரலுக்கு தேர்தல் மை தீட்டி அவளை வாக்களிக்க அனுமதித்தார்கள் என்றும் தெரிகிறது.

மற்றொரு வாலிபர், சிகரெட் பிடிக்கும் பழக்கமுள்ளவர் அதனால் அவரது இடது கை விரல்களில் புகைக்கறை பிடித்துச் சிவப்பேறியிருந்தது. தேர்தல் உத்தியோகத்தர்கள் வாக்களிப்புச் சாவடிக்குச் சென்ற அவர் மீதும் சந்தேகப்பட்டு சற்றுவேளை ஆளை நிறுத்தி வைத்துவிட்டார்களாம். அந்த வாலிபர் மாதிரிக்காக ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துப் புகை இழுத்துக் காண்பித்ததின் பேரில் அவர் ஒரு கைதேர்(ய்)ந்த புகையர் எனத்திருப்திப்பட்டு அவரை வாக்களிக்க அனுமதித்தார்களாம். இப்படிப் பல விநோதங்கள்.

வாக்களிப்புத்தினத்தன்று சிவப்புமையால் தோய்த்தெடுத்த சுட்டு விரல்கள் எங்கும் எல்லோர் கைகளிலும் காட்சியளித்தன. சுட்டு விரல் இல்லாதவர்கள் என்ன செய்தார்கள்? அன்று தங்கள் வாக்குரிமையை உபயோகிக்கவில்லையா என்று கேட்கலாம். அருமையான கேள்வி. ஆனால் இந்தக்கேள்வி எழுவதற்கு இடமில்லால் தேர்தலுக்கு முந்திய சில தினங்களாக இலங்கை வானொலி "ஆள் காட்டி விரல்கள் இல்லாதவர்கள் அதற்காக எங்கும் போய் அலைய வேண்டியதில்லை மறுவிரல்களில் மை அடையாளம் இட்டுக்கொள்ளலாம்" என்று முழு விளக்கமான முன்னெச்சரிக்கையுடன் கவன சிரத்தையாக சொல்லி வைத்ததை இங்கு அவசியம் குறிப்பிடவேண்டும்.

வழக்கமாக தேர்தல் காலத்தில் ஆசைதீர மோட்டார் சவாரி செய்தவர்களுக்கு இத்தடவை வாகன சுகமில்லாமல் நடைபெற்ற தேர்தல் திருவிழா அவ்வளவு சுகப்படவில்லை. இருந்தாலும் இக்க பங்குனி மாதத்து நண்பகல் வெய்யிலில் வாக்குச் சாவடிக்கு நடந்து சென்று தங்கள் குடி ஒப்ப உரிமையை நிறைவேற்றியதில் அவர்களுக்கு ஒருதிருப்தி. இந்தச்சாவடிகளில் எங்கேயாவது தாகசாந்தி காவது தர்ம சிந்தையாக களைப்பை ஆற்றி கொள்ளவாவது அவர்களுக்குக் கிடைந்தா என்பதுவற்றித் தெரியவில்லை.

இதெல்லாவற்றையும் விட இத்தடவை வானொலியில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட அந்த ஒரு முழுநாள் விமரிசையை வாக்காளர்கள் எப்படி மறப்பார்கள்? வாக்களிப்புநடைபெற்ற தினம் இரவு வெளியே நகர மண்டபத்துக்கும் கச்சேரிக்கும் தேர்தல் முடிவை அறிவதற்குப்போன தீவிர தேர்தல்வாதிகளைத்தவிர மீதிப்பேர் ஆண்களும் பெண்களுமாக தங்கள் வீடுகளிலிருந்தே வானொலியில் தேர்தல் முடிவுகளைக் கேட்டார்கள். 23ம் திகதி இரவு 10 மணியளவில் முதல் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. அதன் பின் மற்றொரு தொகுதியின் முடிவு நள்ளிரவாக அறிவிக்கப்பட்டது. இதற்குப் பிறகு வானொலிப் பெட்டியில் சற்றுச்சூடுபிடிக்க ஆரம்பித்து அறிவித்தலின் மெதுமெதுவா சுறுசுறுப்படைந்து, பொழுது விடிய ஒன்றன்பின்ஞென்ருக போட்டிக்கட்சிகள் ஒன்றையொன்று துரத்தியதைப் போல, விறுவிறுப்புடன் வெளிவரத்தொடங்கின. மறுநாள் இரவு எட்டு மணிவரை தேர்தல் ஒலிபரப்பு இடைவிடாமல் தொடர்ந்து நடைபெற்றது. இந்த 22 மணிநேரத்திலும் இசைத்தட்டுச் சங்கீதத்தை குறைவில்லாமல் வாரி வழங்கி வாக்காளரை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தார்கள் வானொலி நிலையத்தார்கள். இதே சமயம் கச்சேரிகளின் முன்னும் நகர மண்டபங்களின் முன்னும் காத்துநின்ற வாக்காளரின் தூக்கச்சோம்பலைப் போக்கடிக்க இடையிடையே அதிர்வெடிகள் முழங்கிக்கொண்டிருந்தன.

இப்படியாக, இத்தடவை தேர்தல்விநோதமாக வானொலி சேவை இங்கு திறமையாகப் பயன்படுத்தப்பட்டதைப் பாராட்டவேண்டும். இந்தியாவில் கூட இனிமேல்தான் இது மாதிரி தொடர்ந்தாற்போல ஒலிபரப்புசேவை ஒன்றைத் தொடங்கி நடத்த ஆலோசிக்கப் போகிறார்களாம். சபாஷ் இலங்கை!

❖

திருகோணமலை, ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, மூதூர், உடுவில், யாழ்ப்பாணம், நல்லூர் கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, கல்முனை, கிளிநொச்சி, கல்குடா, மன்னார், மட்டக்களப்பு, வவுனியா ஆகிய தொகுதிகளில் ஒவ்வொன்றிலும்பதிவாயிருந்தவாக்காளர்களில் நூறுபேருக்கு 75 பேர் மட்டுமே இத்தடவை தேர்தலில் வாக்களித்திருக்கிறார்களாம்.

இம்முறைகட்டுப் பணம் இழந்த அபேட்சகர்களின் பெயரால் மொத்தம் 61,750 ரூபா அரசாங்கத்துக்கு கிடைக்குமாம். இவர்களில் சுயேச்சை அபேட்சகர்களாயிருக்கும் 48 பேரும் வேறு நால்வரும் தலைக்கு ஆயிரம் ரூபாவை இழப்பர். பல்வேறு அரசியல் கட்சிகளின் அபேட்சகர்களாகப்போட்டியிட்ட 59 பேர் ஆளுக்கு 250 ரூபா இழக்கின்றனர்.

இத்தடவை பொதுத்தேர்தலில் 5003 வாக்குகளை பெரும்பான்மையாகப் பெற்றவர்கள் 25 பேர். ஆயிரத்துக்கு குறைவான பெரும்பான்மை வாக்குகள் பெற்றவர்கள் 27. ஒருவர் 93 அதிகப்படி வாக்குகளால் வெற்றிபெற்றிருக்கிறார்.

ஆகக்கூடிய பெரும்பான்மை வாக்குகளைப்பெற்றுப் பெரும் வெற்றி கண்டிருப்பவர்களில் கொழும்பு மத்திய தொகுதி முதல் மெம்பரான [illegible]லீல் கபூர் முதலாவதாக நிற்கிறார். இவர், 26,894 அதிகப்படி வாக்குகளைப் பெற்றார். இவருக்கடுத்தபடியாக இவ்வரிசையில் இடம் பெறுவோர் கொழும்பு மத்திய தொகுதி இரண்டாவது அபேட்சகர் (யு என். பி.) பிரேமதாசவும் மட்டக்களப்பு மெம்பர் (தமிழரசு) திரு இராஜதுரையும் ஆவர்.

திரு இராஜதுரைதம்முடன் போட்டியிட்ட அபேட்சகர் பெற்றவாக்குகளைவிட 17013 வாக்குகளை மேலதிகமாகப் பெற்று மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதிக்கு முதல் மெம்பரானார்.

புதிய பிரதமர் டட்லி போட்டியிட்ட டெடிகம தொகுதியில்தான் இம்முறை அதிகம் பேர்- நூற்றுக்கு தொண்ணூறு வீதமாக, வாக்களித்திருந்தார்கள். ஆகக்குறைந்த வாக்களிப்பு நடைபெற்ற தொகுதி ஊர்காவற்றுறை - நூற்றுக்கு 61. வடமாகாணம் முழுவதிலுமே நூற்றுக்கு 69 பேர் விகிதம்தான் வாக்களித்திருக்கிறார்களென்றும், சப்ரகமுவமாகாணமும் மத்திய மாகாணமுமே கூடுதலான வாக்களிப்பில் முதலாவதாகவின்றதாகவும் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இங்கெல்லாம் வாக்களிப்பு 84 வீதத்தை எட்டியிருந்ததாம்.

# வளரும் விஞ்ஞான விந்தைகள்

## பறவைகளைப்போல் மனிதன் விண்ணில் எழுந்து பறப்பது சாத்தியமாகும்?

— "மாயவன்" —

வானவீதியில் உல்லாசமாகப் பறந்துசெல்லும் பறவைகளைப் பார்த்தபோதெல்லாம் அந்த மாதிரி தன் சடலக்கூட்டோடுமேலெழுந்துபறக்கமுடியவில்லையே என்று ஏங்காதமனிதர் யார் இருக்கிறார்கள்? அவர்களது இந்த தீராத ஏக்கம் நிறைவேறும் காலம் வெகு தூரத்தில் இல்லை என நம்பிக்கை அளிப்பதுபோல அண்மையில் அண்டவெளியில் மிக உயரத்தே ஒரு ரஷ்ய வீரர் 20 நிமிடங்கள் வரை காலையும் கையையும் அடித்து மிதந்து நின்று அற்புதசாதனை ஒன்றை நிகழ்த்திக்காட்டியிருக்கிறார். இராமாயண காலத்தில் அநுமார் இப்படித்தானே விண்ணில் தாவி எழுந்து கடலைத்தாண்டி இலங்கைக்கு வந்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அநுமாருக்கு இறக்கைகள் இருக்கவில்லை. நீண்ட வால்தான் ஒன்று இருந்தது. ஆகவே அநுமார் இலங்கைக்குப் பறந்துவரவில்லை, பாய்ந்து தான் வந்திருக்க வேண்டும்!

நினைத்த மாத்திரத்தே இறக்கைகளைத் தட்டிவிட்டு விர்ரென்று மேலே கிளம்புவது போல ஒரு ஆகாய சைக்கிள் எமக்குக் கிடைப்பது இன்னும் சில காலத்தில் கைகூடிவிடலாம். ஆனால் நமது இந்த ஊனசரீரத்தை மட்டும் தூக்கிக்கொண்டு மேலெழுந்து வானவெளியில் உல்லாசமாக நீச்சலடித்துச் செல்வதற்கு அதற்கு வேண்டிய சக்தியை அளிக்கவல்ல ஊக்கக்கருவிகளையும் மாயக்குளிகைகளையும் எப்பொழுது காண்போம் என்பதே இன்றைய விஞ்ஞான யுக மனிதனின் சிந்தனையாகி வருகிறது.

### பறப்பு உணர்ந்த பூர்வோத்திரம்

இந்த நூற்றாண்டு பிறந்ததும் மனிதனும் பறந்தான். ஆம்! மண்ணில் பிறந்துவாழும் மனிதன் பறவையைப்போல் விண்ணில் பறக்கக் கனவுகண்டான். மிகத்தொன்மையான கனவு அது. கனவு நனவாகியது இந்த நூற்றாண்டுத்துவக்கத்திலே.

1903-ம் ஆண்டு டிசம்பர் 17-ம் தேதி காலை, வாடைக்காற்று வீசியது. குளிர் மிகுதியாக இருந்தது. அமெரிக்காவில் வட கரோலினா மாநிலத்தில் கிட்டிஹாக் என்ற ஊரின் அட்லாண்டிக் கடற்கரையோரத்திலே சந்தடியில்லாத இடத்தில் ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்தது. பலகையும் மஸ்லினும் கொண்டு ஆக்கப்பட்ட ஒரு இயந்திர அமைப்பு உயரே சில அடிகள் கிளம்பியது; அதைச்செலுத்தியவரும் அதற்குள் இருந்தார். அதந்தெட்ரோல், விசை வழங்கியது. நேராகக் கொஞ்சதூரம்பறந்துவிட்டு மீண்டும் கீழே இறங்கியது.

இச்சாதனையை புரிந்தவர் 32 வயதான அமெரிக்கர், ஆர்வில் ரைட். மனிதனின் வரலாற்றிலேயே முதன்முதலில் விசை கொண்டு பறக்கும் விமானம் ஒன்றை அமைத்துப்பறந்தவர் இவர்தான்.

அவர் பறந்தது 12 வினாடி; 14 அடிஉயரம்; 120 அடி தூரம்; அவ்வளவுதான்.

ஆனால் இந்த 12 வினாடிகள் பறவை உலகில் மனிதன் வெற்றிகரமாகப் புகுவதற்கு வகை செய்தன. இறுதியில் அம்புலி, தாரகைகளின் உலகிலும் புகுந்தான்.

அந்த 12 வினாடிகள் தாம் விமான யுகத்தைத் தோற்றுவித்தன. ஆர்வில், அவருடைய சகோதரர் வில்பர் ஆகிய இருவரும் அன்று 4 தடவை ஆளுக்கு இரண்டு தடவை பறந்தனர். வில்பர் 59 வினாடியில் 852 அடி பறந்தார்.

டிசம்பர் 17-ம் தேதி அமெரிக்கா எங்கிலும் "ரைட் சகோதரர்கள் தினம்" கொண்டாடப்படுகிறது. கொடி ஏற்றுதல், விமான வேடிக்கைகள், இன்னும் மற்ற வேடிக்கைகள் இச்சகோதரர்களின் நினைவாக நடத்தப்படுகின்றன. காலஞ்சென்ற ஜனாதிபதி கென்னடி சொன்னபடி, புகழ்மிக்க இந்த சகோதரர்களின் முயற்சியும், அபாரத்திறமையும் இந்த பூமியில் இருக்கும் கண்டங்களை மிகவும் நெருங்கிவரச் செய்துவிட்டன. நமது வாழ்க்கை முறைகளையும் கூட மாற்றிவிட்டன.

ரைட் சகோதரர்கள் அடைந்த வெற்றியிலிருந்து இன்று விமான இயலில் காணும் அற்புதங்களைச் சாதிக்க அறுபதே ஆண்டுகள்தான் பிடித்திருக்கின்றன என்பதை நம்பவே முடியவில்லை. இன்று ஒரு ஜெட் விமானம், அதிர்ச்சியோ சத்தமோ ஏதுமின்றி பிரயாணிகளை உலகம் நெடுகிலும் சிலமணி நேரங்களில் கொண்டுபோக முடியும்.

80,000 அடி உயரத்தில் ஒலியின் வேகத்தைவிட மூன்றுமடங்கு வேகத்தில் பறக்கக்கூடிய விமானம் பற்றி ஜனாதிபதி ஜான்ஸன் அண்மையில் தான் அறிவித்தார். ஆயினும் இத்தகைய புரட்சிகரமான விமானத்தின் அடிப்படையான அமைப்புதத்துவம் வரலாறு [illegible] பண்ணிய முதலாவது [illegible] விமானத்தின் அடிப்படை அமைப்பு தத்துவமேயாகும்.

வில்பர் ரைட் 1867-ம் ஆண்டு ஏப்ரல் 16-ம் தேதி, இண்டியானா மாநிலத்தில் மிலுவில் நகரிலிருந்து 8 மைலுக்கப்பால் ஒரு சிறிய பண்ணையில் பிறந்தார். ஆர்வில், ஒஹையோ மாநிலத்தில் டேட்டன் நகரில் 1871 ஆகஸ்ட் 19-ம் தேதிபிறந்தார். அவர்களுடைய தந்தை ஒரு மத குரு. விஞ்ஞான வளர்ச்சியில் ஆர்வமிக்கவர். ஒருவகைத் தட்டெழுத்து இயந்திரம் ஒன்றை அவர் அமைத்து பொறி இயலில் தமது திறமையைக் காட்டினார்.

ரைட் சகோதரர்களின் அன்னை வர்ஜீனியாவில் பிறந்தவர். வண்டி செய்யும் ஜெர்மானியர் ஒருவரின் மகள். அவர் கல்லூரிப் படிப்புப் படித்து பட்டம் பெற்றிருந்தார். கணக்கில் புலி; தமது கணவரின் விஞ்ஞான நாட்டத்தில் அவரும் பங்கெடுத்துக் கொண்டார். தமது பிள்ளைகள் தமது சமையல் அறையை, சோதனைகளுக்கு ஆய்வுக் கூடமாகப் பயன்படுத்த உற்சாகமூட்டினார்.

ஒருசமயம் ஆர்வில் சொன்னதாவது:-

"...குழந்தைகளுக்கு எப்பொழுதும் உற்சாகமூட்டும் சூழ்நிலை இருந்து வந்த வீட்டில் நாங்கள் பிறந்து வளர்ந்தது எங்கள் பாக்கியமே ஆகும். புதுமையைத் துருவி ஆராயும் ஆர்வத்திற்கும், அறிவு வளர்ச்சிப் பணிகளுக்கும் எப்பொழுதும் ஊக்க மூட்டப்பட்டுவந்தன. மாறான சூழ்நிலையிலிருந்தால் எங்களுடைய புதுமை ஆர்வம் கனியாமல் மொட்டிலேயே கிள்ளி எறியப்பட்டிருக்கும்."

### சந்திரனில் மனிதன் இறங்கும் காலம்

இரண்டரை இலட்சம் மைல் தொலைவிலுள்ள சந்திரனுக்கு மனிதன் போய்ச் சேர்வானா? பூமத்திய ரேகை வழியாகப் பத்துத்தடவை உலகைவலம் வரும் தூரமே சந்திரனுக்குச் செல்லும் தொலைவு.

இன்றுள்ள சிறந்த ஏவுகணைகளும், விண்வெளிக் கப்பல்களும் போய் அடையக்கூடிய தொலைவுக்குள்ளேயே சந்திரன் இருக்கிறது என்று கூறுகிறார், நிலப்படங்கள் வரையும் தலைசிறந்த அமெரிக்க வல்லுநர் ஆல்பர்ட் எல். நோவிக்கி. 1970க்குள் அமெரிக்கா ஒரு மனிதனைச் சந்திரனில் இறக்கிவிடும் என்றும் அவர் கூறுகிறார்.

நோவிக் தற்போது இந்தியா வந்துள்ளார். ஐ. நா. ஆதரவில் இந்நாடு வந்துள்ள அவர், ஐதராபாத் நகரில் நிலப்படங்கள் அச்சிடும் புத்தம் புதிய ஒரு நிலையமும் நில அளவீடு பயிற்சி நிலையமும் நிறுவுவதில் இந்திய அதிகாரிகளுக்கு துணை செய்வார்.

அமெரிக்க விண்வெளிக் கப்பல் ரேஞ்சர்-7 சென்ற ஆண்டு சந்திரனுக்குப் பயணம் செய்ததால், அங்குபோய் மனிதன் இறங்கும் வாய்ப்புகள் பெருமளவு உயர்ந்துள்ளன. சந்திரனின் மேல் பரப்பைப்படம் பிடித்து அது ஏராளமான படங்களை பூமிக்கு அனுப்பி வைத்தது. இவை வரலாற்றுச் சிறப்புள்ளவை என்றுநோவிக் கூறினார். பேராற்றல் படைத்த தொலைநோக்கிக் கருவிகள் எடுத்த சந்திரனின் படங்களையும் விட 2000 மடங்கு அதிக நுட்பமான படங்கள் ரேஞ்சர்7 எடுத்தவை.

### வெப்பமும் குளிரும்

சந்திரனைபற்றிய ஒரு முக்கிய அம்சம், அதைச்சுற்றி

(4-ம்பக்கம் பார்க்க)

பைந்தமிழ்ப் பூங்கா-12

# எரிமலையெனக் கொதித்தெழுந்த பெண்மையின் சீற்றம்

## பத்தினித் தெய்வமாக மாறிய கண்ணகி அவதாரம்

— செல்வி க. பூரணம் —

மதுரைக் காண்டத்தை நினைவூட்டும் வகையில் பங்குனி மாதத்து வெயில தகிக்கும் இந்நாளில் அம்மன் கோவில்கள் உள்ள ஊர்களெங்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் குளுத்தியும் நடைபெறுவது வழக்கம்.

பத்தினித் தெய்வமாம் கண்ணகி அம்மன் வழிபாடு சரித்திர கூறுறுப்படி கடல் சூழ் இலங்கை கயவாகு மன்னன் என்பவரால் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது. பத்தினிக் கடவுளாக மாறிய கண்ணகியின் அற்புதக் கதையான சிலப்பதிகார காவியத்தில் நயம் மிகு பகுதிகளையும் குளு குளு தென்றலென வீசும் இளங்கோவின் புலமையையும் இங்கு எடுத்துக் காட்டுகிறார் கட்டுரை ஆசிரியர்.

கண்ணகியாகிய சற்புக்கூடம் பூண்ட பொற்புடைத் தெய்வதத்திற்குப் புவிமன்னர் கல்லைக் கொண்டு கற்கோவில் மட்டும் கட்டியதோடு அமையாது கவிக்கோவிலும் கட்டியவர் கவிமன்னராகிய இளங்கோ அக்கவிக் கோவிலாம் சிலப்பதிகாரம் உண்ண உண்ணத் தெவிட்டாத தீஞ்சுவை அமுதமாகும் அவ் அமுதத்தின் உள் நுழைந்து ஒரு சில துளிகளை நுகர்வோம்.

புகார்க்காண்டம் சிலப்பதிகாரத்தின் எழுச்சியாகவும் மதுரைக்காண்டம் பேராரவாரமாகவும் வஞ்சிக்காண்டம் நீர்க்குமிழியாகவும் காணப்படுகிறது. மதுரைக்காண்டத்துடன் கதைமுடிவதால் வஞ்சிக்காண்டம் அவசியமா என்று சிலர் வினா எழுப்புதலைக் காண்கிறோம். இளங்கோவின் எண்ணத்தை வாசகர்களுக்கு வஞ்சிக் காண்டமே படம்பிடித்துச் செய்கிறது. வஞ்சிக் காண்டம் எழுதாவிட்டால் இளங்கோ எண்ணம் சிதையும், அழியும். வஞ்சிக்காண்டம் பொற்கொல்லனால் வளர்கிறது.

இளங்கோ கண்ணகியை அறிவுத் தெய்வமாகவும் மாதவியைக் கலைத்தெய்வமாகவும் அமைத்துக் காவியத்தை இயக்கிச் செல்லும் உபாயத்தை நாம் சிந்திக்கவேண்டும். கண்ணகி கோவலன் கொலைப்படும் வரை அறக்கற்புடையவளாகவும் கோவலன் இறந்தபின் மறக்கற்புடையவளாகவும் தெய்வமாகவும் தென்படுகின்றாள், அன்பிற்காக அன்புசெய்யும் மெல்லியரின் இயல்பை அறக்கற்புடைக் கண்ணகியாம் ஆரணங்கின் மூலம் அறவோராகிய இளங்கோ அழகாக உணர்த்துகிறார்: பொறுமையின் இருப்பிடமாக அன்பின் சிகரமாக வாழ்ந்த கண்ணகி கோவலனைப் பிரிந்திருக்கும் போது தேவந்தி என்பவள் வந்து "சோமகுண்டம், சூரிய குண்டம், துறைமூழ்கி காமவேள் கோட்டம், தொழுதார், கணவரோடு தாம் இன்புறுவர்" ஆகையால் ஒருநாள் சென்று நீராடுவோம் வா என அழைக்கிறாள் தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள் என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு இலக்கியமாக வாழ்ந்த கண்ணகி அஃது எனக்குப் பெருமையில்லையென மறுக்கிறாள். இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்யும் பெண்மைக்குணமுள்ள கண்ணகி தம்மை இகழ்ந்த வழிப்போக்கருக்கு கவுந்தியடிகள் நரிகளாகும்படி சாபம் விதித்த போது அறியாமையால் செய்த அவர்களை மன்னிக்கும்படி வேண்டுகிறாள். மதுரைக்குச் செல்லும் வழியில் களைப்புற்ற கண்ணகி கோவலன் கவுந்தியடிகள் ஐயைக்கோட்டத்தில் இளைப்பாறி இருந்தனர். இளைப்பாறும் வேளையில் தெய்வம் வந்துற்ற சாலினி கற்புக்கடன் பூண்ட பொற்புடைத் தெய்வதத்தை 'இவளோ, கொங்கச் செல்வி, குடமலையாட்டி, தென் தமிழ்ப்பாவை செய்த தவக் கொழுந்து, ஒரு மாமணியாய் உலகத்திற்கு ஓங்கிய திருமாமணி' எனப்போற்றுகிறாள். இளங்கோவின் இதயம் இங்கு அப்படியே தெளிவாகத்தெரிகிறது. பெண்மைக்கு ஒளிபெற்ற விரும்பிய அறவோர் தாம் படைத்த பெண்ணை ஓர் நாட்டுக்குரிய பெண்ணாகப் படைக்கவில்லை, உலகம்போற்றும் உத்தமியாகவே படைக்கின்றார். கண்ணகியைச் சேர, சோழ, பாண்டிய மக்கள் மட்டுமன்றி உலகமேபோற்றும் திருமாமணியாய் இவ்வுலகிற்கு ஒளிவீசுவாள் என்பதை மதுரைக் காண்டத்திலே இளங்கோ எடுத்து இயம்புகிறார். இளங்கோ இக்காப்பியத்தை பலநாட் திட்டமிட்டு முடிவிற்கு வந்து முன்னுக்குப் பின் முரணில்லாது வரைந்து செல்கிறார். சாலினித்தெய்வம் கூறியதைக்கேட்ட கண்ணகி 'பேதுறவு மொழிந்தனள் முதறிவாட்டி' என்று அரும்பெறற் கணவரது முதுகின் பின்னே ஒதுங்கி கதிரிலே புன்முறுவல் பூக்க நிற்கிறாள். கண்ணகியை ஆயர்ச்சேரியில் அடைக்கலமாக மாதரியிடம் கவுந்தியடிகள் விட்டுச் செல்கிறார். கண்ணகியின் மென்மையை சமையல் செய்வதன் மூலமும் எடுத்துக்காட்டுகிறார். பல்வேறு பகல்காய்களையும் தன் மெல்லிய விரல்கள் சிவக்கும் வண்ணம், அரிவாள் மணையிலே கண்ணகி அரிந்தனள் அவள் திருமுகம் வியர்த்தது. செவ்வரி படர்ந்த கண்கள் சிவந்தன. அந்நேரத்திலே ஐயையுடன் சேர்ந்து கோவலனுக்கு உணவு சமைத்தனள் என்கிறார். கோவலன் உண்டபின் தான் கண்ணகிக்குச் செய்த கொடுமைகளை எண்ணிக் கலங்குகிறான். கலக்கத்தைக் கண்ணுற்ற கண்ணகி தன் துன்பத்தை எடுத்துக்கூறினளில்லை இருந்தோம்பி இல்வாழ்வதன் பயனாகிய விருந்தோம்பலைச் செய்யமுடியவில்லையே என்றும் கோவலின் தாய் தந்தையர் உள்ளம் கோவலன் பிரிவால் வினை வருந்தி விட்டதே என்றுமே கண்ணகி வருந்துகிறாள். அறச்செல்வியாகிய கண்ணகி அன்பு, அறிவு, அடக்கம் ஆகியபெண்மையின் உறைவிடமாகக் கோவலன் கொலைபடும்வரை காண்கிறோம்,

இத்தகைய மெல்லியலாள் கோவலன் கொலையுண்டபின் எத்தகைய தோற்றத்துடன் காட்சிதருகிறாள் என்பதைக் காண்போம். சிலம்பைத்திருடிய கள்வன் கோவலன் என்று குரைகழல் மாக்கள் கொலை குறித்தனர் என்று அயலார் கூறுவதைக்கண்ணகி கேட்டாள். கேட்டதும் பொங்கி எழுந்தாள், விழுந்தாள், செங்கண் சிவக்க அழுதாள், மயங்கினாள். மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்து அவலங்கொண்டு அழிவது சரியாகுமோ என்று சிந்தித்தாள் காய்கதிர்ச் செல்வனை நோக்கி கள்வனோ என் கணவன் என்று வினவினாள். அப்பொழுது கள்வனோ அல்லன் கருங்கயற்கண் மாதராய்! ஒள்ளெரி உண்ணும், இவ்வூர் என்றது ஓர்குரல். துன்பம் துணையாகப் புலம்பித்துடித்து மாகச்செல்லும் கண்ணகியைக் கண்டு மதுரை நகரார் மயங்குகின்றனர். கம்பலைமாக்கள் காட்ட புண்தாழ்குருதி புறம் சோரக்கிடந்த கணவனைக் கண்டாள் கண்ணகி ஆனால் கோவலனோ அவளது கடுந்துயரைக் காணாது கிடந்தான். அவளோ 'கண்பழி புனல்சோரும் கடுவினை உடையோன் முன் பண்மொழி குருதியுராய்ப் பொடியாடிக் கிடப்பதோ மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறு இழைப்ப, உண்பதோர் வினைகாண்; ஆ! என்று புலம்புகிறாள். பெண்டிரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்? என்று சொல்லி அழுகிறாள். பழுதுபட்ட உடலின் நீத்து எழுந்திருந்த கோவலன் அவள் கண்ணீரைத் தன் கையால் துடைத்து நீ இங்கேயிருப்பாயாக என்று சொல்லி வானகம் போய்விட்டான். மறக்கற்புக்கொண்ட கண்ணகி 'காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன் தீவேந்தன் தனைக் கண்டு இத்திறம் கேட்பன் யான்' எனச்செல்கிறாள். சென்றவள் 'அறிவு அறைபோகிய பொறியறு நெஞ்சத்து இறைமுறைபிழைத்தோன் வாயிலோயே இணை அரிச் சிலம்பொன்று ஏந்திய கையள் கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று அறிவிப்பாயே அறிவிப்பாயே என வாயிலோனுக்கு அறிவிக்.

(7ம் பக்கம் பார்க்க)

---

# சிறுவர் பூங்கா

## நாடு காவலர்

— புலவர் தமிழ்மாறன் —

[டபிள்யூ. ரி. பீல்ட் எழுதிய 'தபிறேவ் பெட்லர்' என்ற ஆங்கிலக் கதையின் தழுவல்]

—5—

"எனக்குப் பின்னால் வாருங்கள்" என்று சொல்லிக் கொண்டே எழுந்து முற்றத்திற்கு வந்தாள், கிழவனாரின் மனைவி.

அவரும் மிட்டாய் காரனைப் பின்தொடரும் சிறுவன் மாதிரி அவளைப் பின்தொடர்ந்தார்.

அந்த முற்றத்திலே ஒரு குதிரை கட்டிப்பட்டிருந்தது. அதைச் சுட்டிக்காட்டி "ஏறுங்கள்" என்றாள்.

"ஐயையோ, எனக்கு குதிரையில் ஏறிச்சவாரி செய்யத்தெரியாதே. கழுதையாயிருந்தால் பரவாயில்லை, ஒரு தடவையென்னஒன்பது முறை இந்த ஊரையே சுற்றிக் கொண்டுவருவேன்."

"அதெல்லாம் முடியாது. ஏறுங்கள் முதலில்" என்றாள்.

அவர் ஏறியதும் குதிரையையும் அவரையும் ஒரு கயிறு கொண்டு இறுக்கமாகக் கட்டினாள். அதன் பிறகு குதிரையை அவிழ்த்து விட்டாள்.

அடுத்த கணம் குதிரை நாலுகால்களையும் உதைத்து, ஒரு சிலிர்ப்புச்சிலிர்த்துவிட்டு ஓடத்தொடங்கியது.

"அடியே, என்னைக் காப்பாற்றடி" —கிழவர் அலறினார்.

"கம்மா சத்தம் போடாமல் சுகமாய்ப் போய்வாருங்கள்." -மனைவி கத்தினாள்.

குதிரை பறந்தது! 'ஜெக் கட்டை' விட வேகமாய்ப் பறந்தது! உடலில் வலியையும், மனதில் 'மரணத்தை நோக்கிப் போகிறோம்' என்கிற பீதியையும் சுமந்தவாறு கிழவர் குதிரையில் பயணம் செய்துகொண்டிருந்தார். தூரத்தே ஒரு மரம் தெரிந்தது. அடுத்த கணம் அந்த மரத்தை இறுக்கமாக இரண்டு கைகளாலும் பற்றிக்கொண்டார், என்ன ஆச்சரியம்! அந்த மரம் வேரோடு பெயர்ந்தது. அடுத்த மரத்தைப்பிடித்தார். அதுவும் அப்படியே. இவ்வாறு எல்லாமரங்களும் வேரோடு வந்தனவே ஒழிய ஒன்றும் அவருடைய ஆபத்துக்கு உதவவில்லை.

இதே நேரம் இனுவில் வேந்தன் பாசறை முற்றத்தில் வீரன் ஒருவன் உலாவிக்கொண்டிருந்தான், திடீரென 'ஓடிவாருங்கள்; கெதியாய் வாருங்கள்' என அலறினான் அவன்.

அடுத்தகணம் வீரர்களெல்லாம் ஓடிவந்தார்கள். ரயிலிருந்து 'பிளாட்பாரத்தில்' குதித்தோடி வரும் பிரயாணிகள்போல் கூடாரத்திற்குள்ளிருந்து குதித்தோடி வந்தார்கள், 'என்ன? என்ன நடந்தது? என்ன விஷயம்?' என்று கேட்டுக்கொண்டே ஓடிவந்தார்கள்.

இனிப்புப் பலகாரத்தைச் சுற்றிமொய்க்கும் ஈக்களைப் போன்று வீரர் கூட்டம் அந்த வீரனைச் சூழ்ந்துகொண்டது.

"அதோ பாருங்கள்"

அவன் சுட்டிக்காட்டிய திசையில் எல்லாருடைய பார்வையும் சென்றது.

அங்கே......!

ஓர் உருவம் வந்துகொண்டிருந்தது உயரமான குதிரையில் வந்து கொண்டிருந்தது அருகிலுள்ள மரங்களை இடுங்கிப்போட்டவண்ணம்அதுவந்து கொண்டிருந்தது.

"அட்டா எவ்வளவு பெரிய குதிரை! இவன் யமனுய்த்தான் இருக்கவேணும். அவசரத்தில் ஏலமாட்டைவிட்டுவிட்டு குதிரையை எடுத்துக் கொண்டு வருகிறான்போல. இன்று நாங்களெல்லாம் தொலைந்தோம்" என்றான்.

"அடேய்! அவன் மட்டும் வரவில்லையடா, அவனுக்குப் பின் ஒரு பட்டாளமே வருகுதடா" என்றான் ஒருவன்.

"எப்படியடா உனக்குத்தெரியும்?"

"அட மூட்டாள்! இதுகூடவா சொல்லித்தெரியணும்! ஊசிக்க வேண்டாமோ?"

"இப்போது என்ன செய்யலாம்?"

"ஓடு ஓடு, செய்வோமடா?"

"திரும்பிப்பாராமல் எடுப்போம் ஓட்டம்."

அவ்வளவுதான். அந்த வீராதி வீரர்கள் எடுத்தார்கள் ஓட்டம். இல்லை, பறந்தார்கள் துரும்பு விழுந்ததும் துள்ளிப்பறக்கும் ஈலையான்கள் மாதிரிப் பறந்தார்கள்

(தொடரும்)

---

### அவனியில் இன்பம் பெற்றிடுவோம்

-கு. நவரத்தினராஜா-

அன்னை தந்தை
என்பவர்
அன்பின் உருவாய்
அமைந்தவர்
அறிவை நிறையப்
பெற்றவர்
இனிய வாழ்வைத்
தந்தவர்

நல்வழியைக் காட்டி
நாளும்
எம்மைக் காத்து
உலகிலே
வல்ல வாழ்வு
வாழ்ந்திட
வலிமை எமக்குத
தந்தவர்

அன்னையும் தந்தையும்
கோவிலடா
அறிவிற் சிறந்த
தெய்வமடா
அவர்கள் பாதம்
வணங்கியே
அவனியில் இன்பம்
பெற்றிடுவோம்

---

1-ம் ஆள்: அண்ணே, நீங்கள் எந்த அபேட்சகருக்குப் புள்ளடி போட்டீர்கள்?

2-ம் ஆள்: வஞ்சகமில்லாமல் மூன்று பேருக்கும் புள்ளடி போட்டு விட்டேன்.

அனுப்பியவர்:
சி. தில்லைநடராஜன்,
உடுப்பிட்டி.

---

### வான் முகில் ஆடை

—செ. மகேந்திரன்—

வானம் அணிந்திடும் ஆடை - பல
வர்ணம் நிறைந்திட்ட நறுமுகில் ஆடை
நாளும் வழுங்கிடும் ஆடை - நீரைத்
தாங்கியே ஆடிடும் கார்முகில் ஆடை

வெள்ளை நிறமுகில் ஆடை - நல்ல
வேளை இளமஞ்சள் பூசிய ஆடை
கொள்ளை எழிலுள ஆடை - நல்ல
கோலம புனைந்திட்ட தங்கமே லாடை

செந்நிற வண்ணமோ ராடை - சாலை
சேதிகள் சொல்லுமவ் வானமே லாடை
மின்னுநற் பொன்னிற ஆடை - மாலை
மேருகுவான் மேனியை மூடிடும் ஆடை

மந்தைகள் கூட்டமோ ராடை - ஒளிர்
மாமணி பூட்டிய மன்னவன் ஆடை
கந்தையாய் உள்ளவெண் ணாடை - புயற்
காற்றிடை சிக்கிக் கலைந்தவோ ராடை

இந்தநல் ஆடைகள் பாரீர்! — மகா
இந்திரன் தேவிபால் இரவலோ கேளீர்!
சிந்தைகொள் வான்முகில் பாரீர் — கண்
சென்றிடின் அங்குளம் நின்றிடும் கேளீர்!

# பைந்தமிழ்ப் பூங்கா

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கிறான். வாயிலோன் பாண்டியனுக்கு அறிவித்ததும் "வருக மற்று அவள் தருக ஈங்கு" என்கிறான். கொலைகாரன் காதைசகுமுன் பொறுமையின் உறைவிடமாய்த்திகழ்ந்த கண்ணகி பொங்கியெழுகிறாள். "யாரையோ நீ மடக்கொடியோய்" என அரசன் இரக்கத்துடன் கேட்கிறான், ஆனால் கண்ணகிதான் ஒரு பெண்! கேட்பவன் ஓர் அரசன் எனப் பொருட்படுத்தினாளில்லை. 'தேராமன்ன செப்புவதுடையேன்' என்று கூறத்தொடங்குகிறாள்" கள்வனைக்கொல்லுதல் செங்கோன்மை அன்று என்றவனுக்கு சாற்சிலம்பை உடைத்துக்கள்வனல்லன் கணவன் எனநிருபிக்கிறாள்.

பாண்டிய மன்னன் அரசமுறையிற் நீ கூறவேண்டும் பாண்டிமாதேவியைத் திருப்திப்படுத்த விரும்பிய மன்னன் தீர்ப்பில் அவசரப்பட்டுவிட்டான். அதன் பயன் செங்கோலோச்சிய பாண்டிய அரசின் செங்கோல் சரிந்தது அத்தடபெரும் நிலையபாண்டியமன்னனது உயிர் பிரிந்து சென்று நீங்கியது. பாண்டிய மன்னன் இறந்தது இந்த நாட்டிற்கே பேரிழப்பாகும். பாண்டியன் இழப்பினால் கண்ணகி என்ற மாபெரும் தெய்வத்தின் ஆற்றலைப்பெற்றோரும்,காலம் என்ற பேய் அரசனின் உயிரையும் நீதியையும் பறித்தது.

பண்பாடமைந்த ஆன்றடங்கிய சான்றோராகிய இளங்கோ கண்ணகிஎன்ற தன் கதாநாயகியின் மூலம் பெண்மையின் பெருமையையும்வலிமையையும் வலியுறுத்திக்கூறுகிறார். அறிவுத்தெய்வத்தை இவ்வண்ணம் காட்டிய இளங்கோ கலைத்தெய்வமாக மாதவியைக் காட்டிச் செல்கிறார். பண்டைச்சமுதாயத்தில் இருந்துவந்த பெருங்குறையை முறியடிக்கமுனைந்தார் இளங்கோ. அவரதுகாலத்திலும் அவருக்கு முந்திய காலத்திலும் ஒருத்திக்கு ஒருவன் என்ற கட்டுப்பாடு வைத்த தமிழகம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாடு வைக்கத்தவறியது. இத்தவறை பொய்யாமொழிப் புலவர் எதிர்த்தார். அவர் வழிவந்த இளங்கோ ஆணித்தரமாக அக்கொள்கையை அழித்து ஒருத்திக்கு ஒருவன் என்பதுபோல ஒருவனுக்கு ஒருத்தி என்பதை நிறுவ ஆக்கத்தொண்டுசெய்தார். பெண்மையைப்போற்றும் அப்பேரறிஞர் சேற்றிலே முளைத்த செந்தாமரை போலவும், கடலிலே விளைந்த முத்துப்போலவும் பரத்தையர் குலத்தில் மாதவி என்ற கற்பரசியைக் கலைத்தெய்வமாகப் படைத்தார். பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவி கோவலனை விரும்பி அவனுடன் சிலகாலம் இன்பமாக வாழ்கிறாள்.காலம் அவர்களைப் பிரிக்கிறது. கோவலன் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் செல்கிறான். பரத்தையர்குல முறைப்படிவாழும்படிமாதவியை, மாதவியின் தாய் வற்புறுத்துகிறாள். கடலிலே பிறந்த முத்துப் போன்ற அக்காரிகையோ அக்கொள்கையை அடியோடு வெறுத்து கோவலனையே நினைந்து வருந்துகிறாள். கோவலனுக்கு முதல் மடல் அனுப்புகிறாள். அப்பொழுது நிலையற்ற கொள்கையுடைய கோவலன் தன் தவறுணராது அம்மடலை வாங்க மறுக்கிறான். கோவலன் கண்ணகியோடு மதுரைக்குச் செல்லும் போது இன்னோர் மடலை கௌசிகன் மூலம் மாதவி அனுப்புகிறாள். அக்கடிதத்தைப் படித்த கோவலன் "தன் தீது இலள் எனத் தளர்ச்சி நீங்கி என் தீது" என்று உணர்கிறான். கோவலனைக் கொலையுண்டதைக் கேள்வியுற்ற மாதவி பத்தினிப் பெண்டிரின் பணி மேற்கொண்டு பௌத்த நிலையத்தில் வாழ்கிறாள். தான் மட்டுமன்றித் தனது மகளையும் அறநிலையத்திற்கு அழைத்துச் சென்று உலகத்தொண்டு செய்யும் உத்தமியாகிறாள்.

செம்பொன்மாரி செங்கையாற் பொழிந்தவனும், கடக்களிறு அடக்கிய மறவனும் ஒரு பெண்ணின் சுற்றத்தையே பேணிக்காத்தவனுமாக கோவலனைக் கடைசியில் அவன் கொலைப்பட முன் இளங்கோ காட்டிச் செல்கிறார். இத்தகைய கோவலன் கலையுள்ளத்தாலும், நன்கு சிந்தித்துச் செயலாற்றாமையாலும், உறுதியான மனம் உடையவனாகவே இல்லாமையாலும் அவன் கோழையாகி வாழ்க்கையைச் செம்மையாக நடாத்தமுடியாமல் அழிகிறான்.

தமிழ்ச் சமூகத்தைச் சீர்திருத்த விரும்பிய இளங்கோ அறிவுத்தெய்வம் வாயிலாகப் பெண்மையில் ஆக்கமும் அழிவும் பொருந்தியிருக்கிறதென்பதையும் அன்புக்காக அன்பு செய்யும் பெண்மை அதன் ஆக்கச் சத்தியையே பயன்படுத்தி உலகைக்காத்துவருகிறதென்பதையும் அழகுற ஆணித்தரமாக உணரச் செய்திருக்கிறார்.


# வடமொழி நாடகம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கதைகளைப் போலவே மக்களை மகிழ்வித்து வந்துள்ளன.

மேலும் நாடகப் பாணியில் ஒரு புதுமையும் நவீன யுத்தியையும் இத்தகைய நாடகம் தோற்றுவித்தது. ஞானக்கருத்தையும், சமய உண்மைகளையும், சாதாரண மக்கள் கூட எளிதில் உணரக்கூடிய ஓர் இலக்கிய வழியை இத்தகைய நாடகங்களுண்டாக்கின. இந்நவீன இலக்கிய யுத்தியைப் பின்பற்றியே பன்யன் என்ற ஆங்கில நாவலாசிரியர், கிறிஸ்து சமயக்கோட்பாடுகளை விளக்கவும் பக்தியை உண்டாக்கவும், "பில்கிறிம்ஸ் புரோகிறெஸ்" என்ற நாவலை எழுதினார். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருக்கோவையாரும் இத்தகைய உபனிடச்சிலேடைபொருள் உடையதென்பர் ஆன்றோர். இத்தகைய உருவக நாடகங்களிற் றுணைசித்திரவமைப்புப் பெரும்பாலும் திட்டவட்டமாகவும் ஏது பூர்வமாகவுமேயிருக்கும். சமயக் கோட்பாடுகள் புகுத்தப்படுவதால் கதாபாத்திரங்கள்வாழ்வோடு அதிக சம்பந்தமில்லாதன வாகவும் அமைய இடமுண்டு. நாடகப் புலவர் திறமையுடையவராயிருந்தால் சிலசமயம் வெறுங் கோட்பாடுகள் உருவகப்பாத்திரங்களிலே உயிர் பெறவுங் கூடும். மக்களுடைய அல்லல்களும் துன்பங்களும் கண்முன் காட்சிவரக் கூடியவகையில் நாடகம் அமைந்து, ஆன்மவிடுதலைக்காக மனிதன் நடத்தும் பெரும்போராட்ட விசித்திரமான தன்மையும் வியத்தகு முயற்சியும் படம்போலக்காட்சிதரும்.

(இக் கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் முற்றும்)





மெருகூட்டுங்கள்!

வழவழவென முகத்தில் படிந்திருக்கும்
எண்ணெயை அகற்றி,
சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுவான
யௌவன வனப்பை அளிப்பது
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

உங்கள் சருமத்திற்கு புதியதோர் பொலிவு கொடுங்கள். கச்சிதமான தோற்றமளிக்க விரும்பும் யுவதிகள் யாவருக்கும் கிட்டும் இப்பொலிவு எண்ணெய் பசையற்ற மென்மையான பொன்ட்ஸ வெனிஷிங் க்ரீம் சருமத்தை மிருதுவாக்கி பாதுகாக்கிறது. சருமத்தில் காணப்படும் மாசுமருக்களையும். அகன்ற மயிர்க்கண்களையும் மறைத்து சுகப்படுத்துகிறது. கறும்பருக்கள் தோன்றாதபடி பாதுகாக்கிறது. மிருதுவான பட்டுச் சருமத்தை பெற பொன்டஸ் வெனிஷிங் க்ரீமை தனியாக பாவியுங்கள். களங்கமற்ற தோற்றத்துடன் மணிக்கணக்காக பௌடரை சமமாக நீடித்து நிலைத்திருக்கச்செய்ய, பௌடர் பூசுவதற்கு முன் இக் க்ரீமை அடித்தளமாக பாவியுங்கள்.

சருமத்திற்கு புதியதோர்
மெருகூட்ட
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்




566/65

# "மூன்று மாதங்களில் மீண்டும் வருவோம்"

—திருமதி ஸ்ரீமா

கொழும்பு, சனி

முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நேற்று மாலை 6.30-க்கு "அலரி மாளிகை"யிலிருந்து வெளியேறினார்.

பிரதமரைச் சந்திப்பதற்காக "அலரிமாளிகை"க்கு வெளியே பெரும் திரளான மக்கள்குழுமி நின்றனர், "அலரிமாளிகை"க்கு திரு பி பி. ஜி. கலுகல்லே, திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோரும் வந்திருந்தனர்.

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, அலரி மாளிகையை விட்டுப் புறப்படுகையில், அங்கு குழுமி நின்ற மக்களின் கண்களில் கண்ணீர் தேம்பிநின்றது.

நேற்று மாலை சுமார் 5.00 மணிக்கு, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அங்குகுழுமி நின்ற மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

"நாங்கள் ஆட்சி பீடம்ஏறவில்லை என்றுநீங்கள் மனம் நோகக்கூடாது. நாங்கள் மூன்று மாத காலத்தில் மீண்டும் வருவோம்" என்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூறினார்.

சில வர்த்தகர்கள் ஏற்கனவே, பொருள்களின் விலைகளை குறைத்துவிட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## வரி விளம்பரம்

### தேவை

இலங்கைப் பிரஜா உரிமையுள்ள அல்லது விசா உள்ள அக்கௌண்டன் (இந்தியர்) தேவை. சம்பளம் ரூ. 150/- மேலும் விபரங்களுக்கு நேரில் விண்ணப்பிக்கவும்: யப்பான் ஜுவல்லர்ஸ், 164, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம் 1529

பாண், பணிஸ், விஸ்கோத்து முதலியன செய்வதில் கைதேர்ந்த பேக்கர் ஒருவர் தேவை, மாதச்சம்பளம் ரூபா 150/-. (எல்லாப் படியுடனும்) விண்ணபிக்கும்போது தர போதுள்ள குறுதியும் திறமை என்பன பொருந்திய நற்சாட்சிப்பத்திரம் இணைத்து அனுப்பவும்.

விண்ணப்பிக்கும் விலாசம் தலைவர், அச்சுவேலி கூட்டுறவு பாண்சங்கம், அச்சுவேலி 1824

எமது தையற்கடையில் தர வேலை செய்ய நன்கு தெரிந்த பெண்மணிகள் உடன் தேவை தங்குபவர்களுக்கு போடிங் வசதிகளும் உண்டு.

அன்னம்ஸ் சாறி வேக்ஸ் 37, பவர்ஹவுஸ்ரோட்,விக்னேஸ்வரா மேல்மாடி, யாழ்ப்பாணம். 1822

### விற்பனைக்கு

350 பரப்பு நிலம், இடம் காவற்காடு, கொடிகாமம். நெல்லும், தென்னையும் பயிர் செய்யலாம். உரிமையாளர், க. அம்பலவாணர், பொலிகலுஸ், புங்குடுதீவு 1821

### சோதிடம்

எதிரிகளைப் பணியவைக்க-வழக்கு விவகாரங்களில் ஜெயமடைய-தொழில் துறையில் புகழடைய-புதுமனை புகுவிழா நடத்த-தோஷங்களை நிவர்த்தி செய்ய-குழந்தைகளுக்குத் திருஷ்டிகளினால் வரும் பிணிகளை அகற்ற- அரசியலில் ஏற்றம் காண எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்! கட்டண விபரத்துக்கு 10 சத முத்திரை அனுப்பவும், சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை, மங்களேஸ்வரிசோதடநிலையம், திருக்கோணமலை. 1823

### விற்பனைக்கு

ஆலடி, உடுவிலில் மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கும், உடுவில் பெண்கள் கல்லூரிக்கும் இடையில் 15 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு 6 அறைகளும், மின்சார வசதியுமுடைய வீடு. விபரங்களுக்கு: 86, கச்சேரி-நல்லூர் ரோட், யாழ்ப்பாணம், 1825

### வைத்தியம்

கபால இடிக்கு சந்தனாதி பலாட்சாதி தைலம். இன்னும் அனேக ரோகங்கள் குணபடும். பொ. செல்லையா வைத்தியர், கந்தர் மடம், யாழ்ப்பாணம், 1760

### தொய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியல் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய சுற்றுலோக் இலும். தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தா கைலாயபிள்ளையார் கோவிலடி யாழ்ப்பாணம்

# ஏழு லட்சம் ரூபா கடத்தல் பொருள்கள்

## பருத்தித்துறையில் கைப்பற்றப்பட்டன

மாவிட்டபுரம், சனி

ஏழு லட்சம் ரூபா பெறுமதியுள்ள கடத்தல்பொருள்களை நேற்றிரவு பருத்தித்துறையிலுள்ள கரையூர் கடற்கரையில் பருத்தித்துறை பொலிஸ்கோஷ்டியினர் கைப்பற்றியுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சார்ஜண்ட் திரு. நவரத்னம், திரு முருகேசு ஆகியோர் தலைமையில் சென்ற கோஷ்டியினர், நேற்றிரவு பருத்தித்துறையிலுள்ள கரையூர் கடற்கரையில் இக்கடத்தல் முயற்சியை முறியடித்தனர்.

மொத்தமாக 95 மூடைகள் கைப்பற்றப் பட்டிருக்கின்றன இந்த மூடைகளில் பாக்கு பேனுக்கள், கைக்கடிகார "செயின்கள்", நைலோன் பொத்தான்கள், பவுடர் டின்கள், ஒவல்டின்கள் மற்றும் ஏராளமான பொருள்கள் இருந்தன. இந்தப் பொருள்கள் இங்கிருந்து இந்தியாவுக்கு கடத்தப்படவிருந்தன.

கடத்தல் பொருள்கள் யாவும் கைப்பற்றப்பட்டிருப்பதுடன், இச்சம்பவத்தில் சம்பந்தப் பட்டதாகக் கூறப்படும் 25,000 ரூபா பெறுமதியுள்ள ஒருலொறியும் கைப்பற்றப் பட்டிருக்கிறது. இது குறித்து இருவர் சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்டுள்ளனர் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகிறது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். திருச்செல்வம்
(ஸ்தலஸ்தாபன மந்திரி)

அசோகா கருணாரத்ன
(சமூக சேவைகள்)

மொண்டேகு ஜயவிக்கிரமா
(தபால் மந்திரி)

கெப்பிட்டல் (கொட்டாஞ்சேனை) | பிளாஸா (வெள்ளவத்தை)
விஜிதா (மட்டக்)ளப்பு | தீவோலி (நுவரேலியா)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
எஸ். எஸ். ராஜேந்திரன்
பானுமதி — பத்மினி
(மற்றும் பலர் நடித்த)
ராஜா தேசிங்கு

வெற்றி! மாபெரும் வெற்றி!
டயர் றிபில்டிங் சகாப்தத்திலே மகத்தான வெற்றி!
1. கவர்ச்சியான இழை
2. நீடித்த பாவனை
3. உத்தரவாதமுள்ள வேலைப்பாடு
இன்றே உங்களது தேய்ந்துபோன டயர்களைப் புதுப்பிப்பதற்கு எம்மிடம் கொடுங்கள்.
குறுகிய காலத்தில் புதிய டயரைப் போன்று புதுப்பித்துத் தருவோம்.
நோர்தேன் இன்டஸ்றீஸ்
8/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## இரத்தத்தில் மாங்கனீசு கண்டுபிடிக்க புது முறை

புதுடில்லி, மார்ச் 26

மனித இரத்தத்தில் மாங்கனீசச் சத்து எவ்வளவு இருக்கிறது என்பதை மதிப்பிடுவதற்கு, இங்குள்ள தேசிய பௌதிக ஆய்வுச் சாலையில் சாலையில் புதிய முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் சுரங்கங்களில் பணியாற்றும் சுமார் 70 ஆயிரம் பேருக்கு அக்கண்டுபிடிப்பு ஒரு வரப்பிரசாதமாகும் என்று கருதப்படுகிறது. ஏனென்றால் அவர்களுடைய ஆரோக்கியத்துக்குத் தீங்காக மாங்கனீசு நஞ்சு உடலில் ஏறிவிடுவது பேராபத்தாக இருந்து வருகிறது.

உடலில் மாங்கனீசு நஞ்சு ஏறிவிடுவதால், பைத்தியம் பிடிக்கச் செய்யும் கடுமையான ஒருவகை நோய் வந்து விடுகிறது. அந்நோயை அறிந்து கொள்வதற்கு, இரத்தத்திலுள்ள மாங்கனீசு சத்தைக் கணக்கிட்டறிவது முதலில் செய்யப்பட வேண்டிய பணியாகும். ரசாயன முறைகள் மூலம் மெதுவாக இப்போது அது அறியப்பட்டு வருகிறது.

தேசிய பௌதிக ஆய்வுச் சாலையின் ஆடியியல் பிரிவு தகுந்த வண்ணப்பட்டை ஆடி முறையொன்றை உருவாக்கியுள்ளது. இரசாயனமுறையை விட இப்புதிய முறை பழுதற்றதாக இருக்குமென்று கூறப்படுகிறது.

## யாருடைய பணம்?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் டஸ் நிலையத்துக்குச் சமீபத்தில் கஸ்தூரியார் வீதியில் பத்திரிகை விற்பனையாளர் ஒருவரின் கடைக்கு முன்னால் ரொக்கபணம் கிடக்கக்கண்டு கரம்பனைச் சேர்ந்த பி ஏ இராசயோகம் என்பவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார். இப்பணத்தைத் தவறவிட்டவர் எவராவது 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வந்து தகுந்த அத்தாட்சி காட்டிப்பெற்றுக் கொள்ளலாம்.

## லொறி விபத்து: இருவர் பலி

கொஸ்லாந்தை, சனி

கொஸ்லாந்தையிலிருந்து கொழும்பு நோக்கி தேயிலைப் பெட்டிகள் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட "ஒன்டின் லொறி" ஒன்று பலாங்கொடைக்கு அருகாமையில் ஒரு மரத்தில் மோதி சுக்கு நூறாகியது, லொறியின் அடையாளமே காண முடியாமல் போனதுடன் லொறி உதவியாளர் பீட்டர், அல்து முல்லையைச்சேர்ந்த கருணபால, கொஸ்லாந்தையைச் சேர்ந்த பாட்டர் ஆகியோர் அங்கங்கள் வெவ்வேறாகக் கிடக்கக்காணப்பட்டன, லொறிச் சாரதி படுகாயங்களுடன் பலாங்கொடை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார் அவரது நிலைமை மோசமாக இருப்பதாக வைத்தியசாலை வைத்தியர் ஒருவர் கூறினார்.

லொறியிலிருந்த தேயிலைப் பெட்டிகள் பல சேதமடைந்துள்ளதுடன் ஆற்றிலும் மிதக்கின்றன. செய்திகேட்டு ஸ்தலத்திற்கு விரைந்த பொலிசார் விபத்து ஏற்பட்டதற்குரிய காரணங்களை புலன் விசாரணை நடத்துகிறார்கள்.

## தேவைப்படின் ஸ்ரீமாவுக்கு பாதுகாப்பு

கொழும்பு, சனி

அவசியமேற்பட்டால் முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அரசாங்கம் பாதுகாப்பளிக்கும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

தன்னுக்கு பாதுகாப்பளிக்க வேண்டும் என்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கேட்டுக் கொண்டால் அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சகல பாதுகாப்பு வசதிகளும் அரசாங்கம் அளிக்கும்.

## பெண்களுக்கு பைத்தியம் பிடிக்க ஆண்கள் காரணம்!

சென்னை, மார்ச். 26

பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் பைத்தியம் பிடிப்பதற்கான காரணம்பற்றி ஆராய்ந்தபோது ஆண்களைவிட பெண்களுக்குத்தான் அதிகமான பைத்தியம்பிடிக்கிறதுஎன்றும், இதற்கு ஆண்களே காரணம் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள் என்றும் அசெம்பிளியில் பலத்த சிரிப்புக்கிடையே சுகாதார மந்திரி திருமதி ஜோதி வெங்கடாசலம் கூறினார்.

## தீ விபத்தில் 41 வீடுகள் நாசம்

கிருஷ்ணகிரி மார்ச் 26

கிருஷ்ணகிரி தாலூகாவைச் சேர்ந்த கிராமம் 'கதவணி அருணபதி'யில் திடீரென்று தீப்பிடித்து 41 வீடுகளை எரித்து நாசமாயின ஒரு மாடிவீட்டின் ஒரு பகுதியும் எரிந்து விட்டது. திருபத்தூரிலிருந்து தீ அணைக்கும் படையினர் வந்து போராடித் தீயை அணைத்தார்கள்.

இந்த விபத்தினால் ரூ 25000 நஷ்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்படுகிறது. ஒரு கிழவி அடுப்பு பற்றவைத்து விட்டு வெளியில் போய்விட்டபோது, அந்த தீ கூரைக்குத் தாவி, பிறகு எல்லாவீடுகளுக்கும் பரவியதாகக் கூறப்படுகிறது.

### தேவை

அலுமினியப் பாத்திரவேலை செய்யக்கூடிய ஸ்பின்னரும், திகடுவிக்கக்கூடியவரும் தேவை, எவர்சில்வர் மாளிகை, 241, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 1830

REGAL — JAFFNA
NOW SHOWING
Beauties of Night World!
SEXY FOLLIES
(Totalscope - Eastmancolor)
(ADULTS ONLY)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ந் தேதி அச்சிட்டுவெளியிடப்பட்டது